# புதிய கண்ணோட்டம்

# NEW PERSPECTIVE

வெளியீடு 12 | 1989 வைகாசி 01 | ரூபா 2


வடக்கு கிழக்கில் மத்திய அரசுக்கு உண்மையான அக்கறை இருக்குமானால்
முதலில் அதிகாரப் பகிர்வில் அது நாணயமாக நடந்து கொள்ள வேண்டும்

# ஒப்பந்தப்படி நடக்காவிடின் பிறகெதற்குப் பேச்சுவார்த்தை?

## ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் தோழர் க.பத்மநாபா அவர்களின் மேதினச் செய்தி.

கடந்த பல தசாப்தங்களாக அகிம்சா வழியிலும், ஆயுதப் போராட்ட வழியிலும் எமது இன விடுதலைக்காகப் போராடி வந்த ஈழமக்களுக்கு இந்த 103வது மேதினம் பல்வேறு வகையிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

தமிழினம் தன்னைத்தானே ஆளும் உரிமையை வடக்கு கிழக்கு மாகாண அரசுமூலம் பெற்றுக் கொண்டுள்ளது. முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் இடையூறுகள் இருந்த போதிலும் சட்டரீதியாக தமிழ்மொழி, சிங்கள மொழியைப் போன்றே இன்று அரசகரும மொழியாக்கப்பட்டுள்ளது. மலையகப் பாட்டாளிகளின் பறிக்கப்பட்ட அரசியலுரிமையை அதாவது பிரஜா உரிமை, வாக்குரிமை, என்பவற்றை மீளப் பெறுவதற்கான சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இச்சம்பவங்கள் ஈழவிடுதலைப் பாதையில் ஒரு திருப்புமுனையாகும்.

மலையகப் பாட்டாளிகளும், ஈழத்தொழிலாளர்களும் தமக்குக் கிடைத்துள்ள அரசியல் அதிகாரத்தையும் அரசியல் உரிமையையும் மேலும் வலுப்படுத்த வேண்டும். சிங்கள பேரினவாதிகளின் ஆக்கிரமிப்பு நோக்கம் கொண்ட திட்டமிட்ட சிங்களக் குடியேற்றமும், தமிழ்பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசமான வடக்கையும் கிழக்கையும் பிரிக்கும் சூழ்ச்சிகள், இனங்களை மோதவிடும் சதிமுயற்சிகள் என்பவற்றை முறியடித்து எமது அதிகாரத்தை மேலும் பலப்படுத்த இந்த மேதினத்தில் நாம் சபதம் எடுக்க வேண்டும்.

மாகாண அரசு மக்கள் அரசாக மாறி தொழிலாள விவசாயிகளின் சட்டரீதியாக சம்பளம், லீவு வசதி, நிரந்தர வேலை, எட்டு மணி நேர வேலை, தேசிய பாதுகாப்பு ஆகியவற்றிற்கு உத்தரவாதம் வழங்குவதுடன், நிலமற்ற விவசாயிகளுக்கு நிலம், வீடற்றவர்களுக்கு வீடு தொழில் இல்லாதவர்களுக்கு தொழில் என்பன வழங்க வேண்டும், கடல் தொழிலாளர்களின் நலன் பேண ஏற்ற வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும்.

இம்மேதினத்தில் மாகாண அரசைப் பலப்படுத்துவோம், மாகாண அரசு தொழிலாளர் விவசாயிகளுக்கு உதவவேண்டும் என்ற பதாகையை உயர்த்திப் பிடிப்போம்.

வடக்கு கிழக்கு மாகாண அரசினூடாக சுதந்திரம், ஜனநாயகம் சமாதானம் என்ற மக்களின் அபிலாசைகளை உயர்த்திப்பிடித்து நாட்டில் நவகாலனித்துவ, நவபாஸிஸ அமைப்பைத் தகர்த்தெறிந்து மக்கள் ஜனநாயகம் புரட்சியை முன்னெடுத்துச் செல்ல இம் மேதினத்தில் அனைத்து உழைக்கும் மக்களும் உறுதிபூண வேண்டும்.

இம் மேதினத்தில் அனைத்து சோஸலிச நாட்டு மக்களுக்கும் தமது விடுதலைக்கும், சுதந்திரத்திற்குமாகப் போராடும் மக்களுக்கும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தோழமை கலந்த நல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றது.

சாதி, மதபேதமற்ற சமத்துவ ஜனநாயகக் குடியரசு மலரட்டும் அணு ஆயுதமற்ற, யுத்தமற்ற, ஆயுதப் போட்டியற்ற உலக நோக்கு வெற்றிபெறட்டும்.

தொழிலாளி வர்க்கத்தின் சர்வதேச தினமான மேதினத்தில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும், சர்வதேச தொழிலாளி வர்க்கத்துடன் இணைந்து "உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்" என்னும் கோஷத்தின் பின்னால் அணிதிரண்டு தொழிலாள வர்க்கத்தின் உரிமைகளுக்காகப் போராடுவோம்.

சிறீலங்கா அரசாங்கம் புலிகளுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பித்திருக்கிறது. மாகாண சபைகளைவிடக் கூடியதான அதிகாரங்களைப் பெற்றுக்கொள்வதற்காகப் புலிகள் பேசுவது ஒருபுறமிருக்கட்டும்.

ஒப்பந்தப்படி மாகாணசபைக்கு வழங்கப்படவேண்டிய அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்வதில் இஷ்டமில்லாமல் இழுத்தடிப்புச் செய்து வருகிற சிறிலங்கா அரசாங்கம் தமிழீழத்தைத் தாகமாய்க் கொண்டவர்களுடன் எது குறித்துப் பேசுகிறது என்பது வியப்பானதுதான்.

இந்த நாட்டில் அமைதியும் ஒருமைப்பாட்டையும் உருவாக்குவதற்கு குழப்பக்காரர்களுடன் இணக்கம் காண்பதுதான் வழி என்று சிறிலங்கா அரசாங்கம் நினைக்குமானால் மேலும் மேலும் குழப்பக்காரர்களை வளர்த்துவிடுவதையே அது செய்து கொண்டிருக்கும் என்று எச்சரிக்க வேண்டியது எங்கள் கடமை.

உள்ள நிலைமைக்குள் ஓர் உருப்படியான தீர்வைக் கொண்டுவருவதற்கு முட்டுக்கட்டையாயும் நேர்மையாக நடந்துகொள்ளத் தெரியாமலும் இருப்பவர்கள் புதிதாகப்பேசி ஏதோ சாதித்துவிடுவார்கள் என்ற நம்பிக்கையை எப்படி ஏற்படுத்திக் கொள்வது என்பதுதான் புரியவில்லை

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைப் பொறுத்தவரையில் விடயங்களைச் சுமுகமாகவும் குறுகிய அரசியல் நோக்கங்களற்ற நேர்மையுணர்வுடனும் பேசித் தீர்வுகளைக் கொண்டு வருவதற்கும், ஜனநாயக வழிக்குத் திரும்புகிறவர்களை வரவேற்பதற்கும் தயாராகவே இருக்கிறது.

ஆனால், அனைத்துவகை அவலங்களுக்கும் இழப்புக்களுக்கும் பிறகு தமிழ் பேசும் மக்களுக்கு ஒப்புக்கொள்ளப்பட்ட அதிகாரங்களை வழங்காமல் இழுத்தடிப்புச் செய்வதற்கு, இந்தச் சந்தர்ப்பங்களைச் சாட்டாகக் சொள்ள முற்படுவதை அனுமதிக்க முடியாது.

சிறிலங்கா அரசாங்கம் பேச்சுவார்த்தைகளுக்கும் ஒப்பந்தங்களுக்கும் வாக்குறுதிகளுக்கும் மாறாகக் குத்துக்கரணமடித்துப் பேரினவாதப் புத்தியைக் காட்டிக்கொள்வது ஒன்றும் வரலாற்றுக்குப் புதியதல்ல; எங்களுக்கு அது தெரியாததுமல்ல.

அதனால்தான் இலங்கை அரசை நம்பி எந்தவொரு ஒப்பந்தத்திற்கும், பேச்சுக்கும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தயாராயிருக்கவில்லை.

தமிழ்பேசும் மக்களுக்கு இன்ன இன்ன உரிமைகளையும் அதிகாரங்களையும் பெற்றுத்தர இந்திய அரசாங்கம் உறுதியளித்ததன் பேரிலேயே, எங்கள் பக்கத்து எச்சரிக்கைகளை இந்தியாவுக்குச் சொல்லி இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டோம்.

இப்போது மாகாண அரசாங்கத்திற்கு அதிகாரப் பரவலாக்கத்தைச் செய்வதற்கு இலங்கை அரசாங்கம் காட்டும் தயக்கம் குறித்தும், நிலைமைகளைக் குழப்ப முனையும் அதன் போக்குப் பற்றியும் இது இப்படி இப்படியெல்லாம் நடக்கும் என்று நாம் தமிழ்பேசும் மக்களின் சார்பாக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள இந்தியாவுக்குத் தெரியப்படுத்தியிருக்கிறோம்.

ஆகவே மாகாண அரசாங்கத்திற்கு அதிகாரங்கள் வழங்குவதற்கு இலங்கை மத்திய அரசைக் கேட்டுக் கொண்டு காத்திருப்பதல்ல எமது நிலைப்பாடு.

இங்கே அதிகாரங்கள் உரிய முறையில் சரியாகவும் முழுமையாகவும் பகிரப்படவில்லையானால், ஒப்பந்தத்தின்படியான மாகாணசபைகள் சட்டத்திலுள்ள அதிகாரங்களை வழங்குவதற்கும் மத்தியிலிருந்து முட்டுக்கட்டைகள்தான் போடப்படுமென்றால், மாகாண அரசாங்கம் தனக்குரியதான அதிகாரங்களைத் தானே எடுத்துச் செயற்படுத்துவதற்கான தீர்மானத்தை வடக்கு கிழக்கு மாகாணசபை எடுக்க வேண்டும் என்று சொல்லி வைக்க விரும்புகிறோம்.

கிடைக்குமா கிடைக்காதா என்றெல்லாம் எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருப்பதற்காக நாம் போராட்டத்தை இடைநிறுத்தி ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளவில்லை.

இந்த நாட்டில் அமைதியான முறையில் எமது மக்களின் ஜனநாயக உரிமைகளை நிலைநாட்டிக் கொள்ளவே ஒரு தேர்தல் மூலம் மக்களின் பெரும்பான்மை வாக்குப் பலத்தோடு மாகாணசபையை ஏற்றுக் கொண்டோம்.

எனவே, நாம் மாகாணசபைத் தேர்தலுக்கு முன்பு சொல்லிய அனைத்து வாக்குறுதிகளின் படியும் நடந்து கொள்ள வேண்டிய தேவை தான் நம் முன்னாலுள்ளது.

எந்தச் சூழ்நிலையிலும் நாம் மக்களை ஏமாற்றுகிற வகையில் நடந்து கொள்ள மாட்டோம் என்பதை உறுதிப்படுத்துவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதற்குச் சண்டை? எதற்குப் பேச்சு?

**சிறீலங்கா அரசுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை நடாத்த முற்பட்டுள்ளதானது, வடக்கு கிழக்கு மாகாணத்தில் ஜனநாயக சூழலை ஏற்படுத்துவதற்கான நல்லதொரு அறிகுறியே. இந்த அமைதியை, ஜனநாயகத்தை விரும்பும் எவரும் நிச்சயம் இதனை வரவேற்கவே செய்வர்.**

**அதே சமயம், நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையானது, ஆரம்ப கட்டத்திலேயே முறிவடைந்து விடுமா? அல்லது மாதக் கணக்கில் இப் பேச்சுவார்த்தை நீடிக்குமா? என்பவை ஒரு புறமிருக்க, இப் பேச்சுவார்த்தை மூலம் சரியானதோர் தீர்வு ஏற்பட்டு தமிழீழ விடுதலைப் புலிகள், ஜனநாயகப் பாதைக்கு திரும்புவார்களா? என்பதே இப்போது எழுகின்ற முக்கியமான கேள்வியாகும்.**

இலங்கை அரசுக்கும், இந்திய இராணுவத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கெதிராகப் போராடிய ஏனைய குழுக்களுக்கும் எதிராக விடாப்பிடியாகப் போராடி வந்த இவர்கள் திடீரென பேச்சுவார்த்தைக்கு வந்ததன் மர்மம் என்ன?

சிறீலங்கா ஜனாதிபதியின் வேண்டுகோளை நிராகரித்த இவர்கள், அதற்கடுத்த நாளே பேச்சுவார்த்தைக்கு சம்மதித்ததன் நோக்கமென்ன

பேச்சுவார்த்தையில் முக்கியமாக இவர்கள் முன்வைக்கப் போகும் கோரிக்கை என்ன?

நிச்சயமாக இவர்களது கோரிக்கையானது வட—கிழக்கு மாகாண சபை என்பதிலும் விட அதிகபட்சமானதாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை.

அப்படியாயின் அக்கோரிக்கையை ஏற்றுக்கொள்ள ஜனாதிபதி பிரேமதாசா தயாராக உள்ளாரா?

ஏற்கனவே வடக்கு—கிழக்கு மாகாண சபைக்கு உரித்தான அதிகாரங்கள் வழங்கப்படவில்லை 13வது திருத்தச் சட்டத்தில் உள்ள அதிகாரங்களே அமுலாக்கப்படவில்லை, சிறீலங்கா அரசானது இவ்விடயத்தில் இழுத்தடிப்புச் செய்கின்றது என ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர்கள் குற்றச்சாட்டுகளைத் தொடுத்த வண்ணமுள்ளனர்.

இப்படியான சூழ்நிலையில் மாகாண சபையிலும் விட அதிகமான அதிகாரங்களை சிறீலங்கா அரசு வழங்கும் என்று எவ்வாறு எதிர்பார்க்க முடியும்.

அதிகாரப் பகிர்வைப் பற்றி தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை நடத்தாமல் இப்பொழுது உள்ள மாகாண அமைப்பு முறையை அங்கீகரித்து ஏற்றுக் · சொள்வார்களாயின்,

ஒப்பந்தத்தின் பின்னர் இவர்கள் ஏன் போராட்டம் நடத்தினார்கள்?

ஆயிரக்கணக்கான மக்களும் நூற்றுக்கணக்கான போராளிகளும் இதுவரை இறந்தது எல்லாம் வீண் விரயம்தானா?
இல்லையேல், மாகாண சபையைக் கலைப்பதிலும், இந்திய இராணுவத்தை இலங்கையை விட்டு விரட்டுவதும் தான், புலிகளின் உடனடித் திட்டமா?

அப்படி நடக்குமாயின், அதற்கான மாற்றீடு என்ன? அதற்கு அவர்கள் வைத்துள்ள திட்டமென்ன?

இந்திய இராணுவம் இங்கிருந்து போகுமாயின் அந்த இடத்தை சிறீலங்கா இராணுவமே நிரப்பும்

அதனை புலிகள் ஏற்றுக் கொள்கின்றார்களா?

சிறீலங்கா இராணுவம் தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பளிக்கும் என்று அவர்கள் நம்புகின்றார்களா?

அப்படி இல்லை என்றால் தமிழ் மக்களைப் பாதுகாக்கும் பணியை புலிப்படையினர் கவனிப்பார்களா?

அதற்கான பலம் புலிப்படையினருக்கு உண்டா?

அப்படி இருந்தாலும், சிறீலங்கா அரசாங்கம் புலிப்படையினருக்கு அதற்கான அதிகாரத்தை அளிப்பார்களா?

இக்கேள்விகள் ஒரு புறமிருக்க,

எவ்வளவுதான் இந்திய இராணுவத்தால் பாதிக்கப்பட்ட போதிலும் பெரும்பான்மையான தமிழ் மக்கள் இன்றைய சூழ்நிலையில் இந்திய இராணுவம் வடக்கு—கிழக்கை விட்டு வெளியேறுவதை விரும்பவில்லை என்பதே பரவலான கருத்தாக உள்ளது.

இதனை விட TULF, EPRLF, TELO, ENDLF போன்ற அமைப்புகளும் இன்றைய சூழ்நிலையில் இந்திய இராணுவம் வெளியேறக் கூடாது என்றே கூறி வருகின்றனர்,

முஸ்லிம் மக்களும்கூட இந்திய இராணுவத்தின் பாதுகாப்பையே விரும்புகின்றனர்.

இந்நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளும், சிறீலங்கா அரசும் மாத்திரம் பேசுவதன் மூலம் எந்த ஒரு வெற்றிகரமான தீர்வும் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உண்டா?

சரி பிழை என்ற விமர்சனங்களுக்கு அப்பால் இன்று வடக்கு—கிழக்கில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசு உள்ளது. அவ்வரசானது முழுமையாக இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டு, அவர்களின் ஒத்துழைப்புடன் இயங்குவதாகவே தோன்றுகிறது.

இந்நிலையில் இந்திய அரசானது மாகாணசபையை கலைப்பதற்கு ஒத்துழைக்குமா?

மறுபுறத்தில் ஜனாதிபதி பிரேமதாசாவைப் பொறுத்த வரையில் ஒரு தலைப்பட்சமாக யுத்த நிறுத்தம் அறிவித்ததற்கும், சரணடைபவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்குவதற்கும் முன் வந்ததானது—

முக்கியமாக, ஏதாவதொரு வகையில் JPV ஐ ஜனநாயக வழிக்கு கொண்டு வருவதற்காகவே.

ஆனால் JVPயானது ஜனாதிபதியின் அழைப்பை முற்று முழுதாக நிராகரித்து விட்டது.

ஆனால் விடுதலைப் புலிகளோ முதலில் மறுத்தாலும் திடீரெனப் பேச்சுவார்த்தைக்குச் சம்மதித்து எல்லோரையும் ஆச்சரியத்தில் மூழ்கடித்தார்கள்.

ஜனாதிபதி, சிறீலங்காவின் தென்பகுதிக்கு அமைதியைக் கொண்டு வர எடுத்த முயற்சி தோல்வியடைந்தாலும் விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு ஒப்புக் கொண்டதானது, ஒரு வகையில் ஜனாதிபதி அவர்களுக்குக் கிடைத்த முதலாவது வெற்றியே.

அதே சமயம், ஜனாதிபதி இப் பேச்சுவார்த்தை தொடர்பாக உண்மையில் கொண்டுள்ள நோக்கமென்ன?

புலிகளின் உதவியுடன் இந்திய இராணுவத்தை வெளியேற்ற விரும்புகின்றாரா?

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை பேச்சு வார்த்தைக்கு ஏதுவாக நிரந்தர யுத்த நிறுத்தத்திற்கு வற்புறுத்துவார்கள். அத்துடன் இந்திய இராணுவத்தில் பெரும் பகுதி நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்றும் வற்புறுத்வார்கள்.

இந்திய இராணுவத்தில் பெரும் பகுதியை அனுப்புவதன் மூலம் JVP ஐ வழிக்குக் கொண்டுவர முடியுமென ஜனாதிபதி நம்பினால், விடுதலைப் புலிகளின் உதவியுடன் இந்திய இராவத்தை வெளியேற்றவே விரும்புவார்.

ஏற்கனவே இந்தியா திரும்ப இருக்கும் 7000 இந்திய இராணுவத்தினரை கொழும்புத் துறைமுகம் ஊடாகச் செல்லும் படி கேட்டுக் கொண்டதானது, சிங்கள மக்களுக்கு தான் இந்திய இராணுவத்தை வெளியில் அனுப்புகிறேன் என்ற விடயத்தை நேரில் காட்டுவதற்காகவே.

முக்கியமாக இப் பேச்சுவார்த்தையைப் பொறுத்த வரை இந்திய இராணுவத்தை அனுப்புவதற்கேற்ற வகையில் இதனை ஆக்கிக் கொள்வதே ஜனாதிபதியின் நோக்கமாக இருக்க முடியும்.

ஆனால் இந்நோக்கம் கூட எவ்வளவு வெற்றி அளிக்கும் என்பதும் கேள்விக் குறியே.

இந்திய—இலங்கை ஒப்பந்தத்தை அமுல் படுத்தவே இந்திய இராணுவம் இங்கு அனுப்பப்பட்டதாக இந்தியா கூறுகின்றது.

ஆகவே ஒப்பந்தம் முழுமையாக நிறைவேறாதவரை இந்திய இராணுவம் முழுமையாக இங்கிருந்து திரும்பும் என்று எதிர்பார்க்க முடியாது. ஒப்பந்தம் நிறைவேற்றப்படாமல் போவதானது, இந்தியாவின் கீர்த்திக்குச் சர்வ தேசரீதியாக ஏற்பட்ட பங்கமாகவே இந்தியா கருதும்.

எனவே ஒப்பந்தம் நிறைவேறாமல் இந்திய இராணுவம் வெளியேறும் என்றும் எதிர்பார்க்க முடியாது.

அத்துடன் LTTE தவிர்ந்த சகல தமிழ் அமைப்புகளும், பெரும்பான்மை தமிழ் மக்களும் இந்திய இராணுவம் வெளியேறக் கூடாது என்று கோஷிக்கும் போது, இந்திய இராணுவம் எவ்வாறு வெளியேறும் என எதிர்பார்க்க முடியும்?

அடுத்த பக்கத்தில் LTTE ஆனது ஆயுதங்களைக் கையளிக்காதவரை யுத்த நிறுத்தம் பற்றிப் பேசவே இந்திய இராணுவம் மறுத்து வருகின்றது. அப்படியான யுத்த நிறுத்தமானது LTTE தன்னை மீள்பலப்படுத்திக் கொள்ளவும், அமைப்புரீதியாகக் கட்டியெழுப்பிக் கொள்ளவும் வழி வகுக்கும் என்று இந்திய இராணுவம் கூறி வருகின்றது.

எனவே ஜனாதிபதியின் வற்புறுத்தலுக்காக அவர்கள் யுத்த நிறுத்தத்தை ஏற்றுக் கொள்வார்களா என்பதும் இன்னும் கேள்விக் குறியாகவே உள்ளதாகும்.

எனவே யுத்த நிறுத்தமோ, இந்திய இராணுவம் வெளியேறுவதோ என்பதெல்லாம் முடியாதென்று ஆகிவிட்டால், இவர்கள் இருவரதும் நோக்கங்கள் நிறைவேற முடியாமல் போய்விடும்.

அப்படி இல்லாமல், ஜனாதிபதியானவர் கூடுதலான அதிகாரங்களை LTTEக்கு கொடுத்து அவர்களை ஜனநாயக வழிக்குக் கொண்டு வருவது அவரது உண்மையான விருப்பமாக இருக்குமாயின்.........

அதை நம்புவதற்கான ஒரு முகாந்திரத்தையும் ஜனாதிபதி இன்னும் ஏற்படுத்தவில்லை என்பதே உண்மையாகும்.

மேற்கண்ட கேள்விகளின் அடிப்படையில் நோக்குமிடத்து, ஒப்பந்தத்தில் ஒரு பங்குதாரரான இந்திய அரசும், மாகாண சபையில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளும் இப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளாத வரையில் இப் பேச்சுவார்த்தையானது வெற்றிகரமான முடிவுகளைக் கொண்டு வரமாட்டாதென்றே தோன்றுகின்றது.

அத்துடன் இரு சாராரும் குறுகிய அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டே இப் பேச்சுவார்த்தையை நடாத்துவதாகவே அர்த்தப்படும்.

**-அன்பு நிலா**

## குறிப்புக்கள்


★ சென்ற இதழில் வெளியான பிரேமச்சந்திரன் எம்.பி அவர்களின் உரையின் தொடர்ச்சி இவ்விதழில் இடம்பெற முடியாமற் போய்விட்டது அடுத்த இதழில் தருவதற்கு முயற்சிக்கிறோம்.

★ உங்களிடமிருந்து புதியகண்ணோட்டத்திற்கான சந்தாவை எதிர்பார்க்கிறோம்.
12 இதழ்களுக்கு (தபாற்செலவு உட்பட) 30 ரூபாவாகும். காசுக் கட்டளைகளை அனுப்பி வைக்க வேண்டிய முகவரி: இல 52, சுங்கவீதி, திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோவியத் நாட்டு மக்களது கதைகள்

லாத்விய நாட்டுக்கதை



## உழைக்க மனமில்லாதவர்க்கு உணவை மறுப்போம்.

பழங்காலத்தில் கொடிய பிரபு ஒருவர் இருந்தார். வேலையாட்களை அவர் விரட்டி விரட்டி வேலை வாங்கி வந்தார். பாதி உயிர் போகும் வரை ஓயாது உழைக்கும்படி அவர்களைப் பலவந்தம் செய்தார். விழா நாட்களிலும்கூட அவர்களுக்கு ஓய்வில்லாதபடி வதைத்து வந்தார்,

ஒரு முக்கிய விழாவன்று பெரும்பாலோரும் ஓய்வெடுத்துக்கொண்ட காலைப்பொழுதில் இந்தப் பிரபு தமது வேலையாட்களை மீண்டும் போரடிக்குமாறு களத்துக்கு அனுப்பி வைத்தார்.

முந்திய நாள் பகலும் இரவும் தொடர்ந்து போரடிக் களத்தில் வேலைசெய்து களைத்துப் போயிருந்த வேலையாட்களால் நிற்கக்கூட முடியவில்லை.

அவர்கள் வேலை ஆரம்பித்த சிறிது நேரத்துக்கெல்லாம் நேரில் பிரபுவே கைத்தடியையும் எடுத்துக்கொண்டு களத்துக்கு ஓடி வந்தார். தனது வேலையாட்கள் வேகமாய் வேலை செய்யவில்லை என்றவராய்க் கைத்தடியை ஓங்கியவாறு சீறிப்பாய்ந்து அவர்களை மிரட்டினார், வாயில் வந்தபடி ஏசினார்.

''தடியன்கள்! போரடி வேலைகள் பூராவையும் முடிக்கும்வரை உங்களைக் களத்தைவிட்டுப்போக விடமாட்டேன்!'' என்று கத்தினார்.

போரடிப். பொறியில் குதிரையைக் கட்டி ஓட்டினால் வேலை சீக்கிரம் முடிந்துவிடும் என்று சொல்லி வேலையாட்கள் குதிரை வேண்டுமென்று கேட்டனர்.

''என்ன? குதிரையா வேண்டும். குதிரை!......'' என்று அவர் கூச்சலிட்டார். ''தடியன்களே, இன்னொருதரம் குதிரை வேண்டுமென்று பேசினால் கழுத்தை நெரித்து உங்களைக் கொன்றுவிடுவேன்! உங்களுக்கு ஒன்றும் குதிரை கிடைக்காது! குதிரைக்கு ஓய்வு வேண்டும்! நீங்களேதான் இந்த வேலையைச் செய்து முடித்தாக வேண்டும்!'' என்று கத்தினார்.

தொண்டை கிழியக் கத்திவிட்டு, அவசரமாய்ப் போரடிக் களத்திலிருந்து வெளியே சென்றார். களத்தில் எழுந்த புழுதியை மூக்காலும் வாயாலும் உள்ளுக்கு இழுக்க விரும்பவில்லை அவர்.

அவர் வெளியேறியதும் யாரோ வெளியே கூச்சலிடுவது வேலையாட்களின் காதில் விழுந்தது.

''ஏய், எகிறாதே! நில்...ல்...லு! ஏய்...ஏய்!...'' என்று யாரோ கூச்சல் போடுவதும் குதிரை கனைப்பதும் கேட்டன. பிறகு கடிவாளம் குலுங்கிற்று—குதிரைக்கு யாரோ சேணமிடுகிறார் என்பது தெரிந்தது.

யாராய் இருக்கும்!

திடுமென ஒரு கிழவர் போரடிக் களத்துள் வந்தார். தொண்டுக் கிழவரான அவருடைய வெள்ளைத்தாடி நீளமாய் இருந்தது. மின்வெட்டுப் போல அவருடைய கண்கள் புளிச்சிட்டன. லகானைக் கெட்டியாய்ப் பிடித்துக் கழுத்து முழுக்கென்றிருந்த கருஞ்சிவப்புப் பொலிக்குதிரை ஒன்றை அவர் இழுத்து வந்தார்.

அந்தக் கிழவர் வேலையாட்களிடம் கூறினார்:

''உங்களுக்கு இதோ ஒரு குதிரை இருக்கிறது. போரடிப் பொறியில் பூட்டியடியுங்கள். கடினமான எந்த வேலையானாலும் இதை நீங்கள் உபயோகித்துக் கொள்ளலாம், குதிரை மக்காறு செய்து அடம் பிடித்தால் ஈவிரக்கம் காட்ட வேண்டாம், சவுக்கை எடுத்து விளாசி நையப்புடையுங்கள்! விலாப்புறம், முதுகு எங்கு வேண்டுமானாலும் அடியுங்கள். ஆனால் தலையில் மட்டும் அடிக்காதீர்கள். குதிரைக்குத் தீனி ஒன்றும் போட வேண்டாம். அந்திப் பொழுதானதும் லாயத்துக்கு இழுத்துச் சென்று வார்களைக் கூரையில் மாட்டிக் கட்டுங்கள்; பகற்பொழுது வேலைக்குப் பிற்பாடு இரவை அது அப்படியே தொங்கி நின்றவாறு கழிக்கட்டும். இந்த குதிரைக்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும்!''

இவ்வாறு சொல்லிவிட்டுக் கிழவர் மறைந்து விட்டார்.

குதிரை பலமாய்க் கனைத்தது, அதன் குரல் அப்படியே பிரபுவின் குரலை ஒத்திருந்தது. வேலையாட்கள் உடனே இது எப்படிப்பட்ட குதிரை என்பதை ஊகித்துக் கொண்டார்கள்.

கருஞ்சிவப்புக் குதிரையை உடனே அவர்கள் போரடிப் பொறியில் பூட்டி வேலையை ஆரம்பித்தனர். ஆனால், கனைத்துக்கொண்டு எகிறிக் குதித்தது, பிடிவாதம் செய்தது, குளம்புகளைத் தரையில் படபடவெனத் தட்டித் தலையைத் திருப்பிக்கொண்டு முண்டிற்று. குதிரை வேலை செய்ய விரும்பவில்லை என்பது தெளிவாய்த் தெரிந்தது. ஆனால் அவர்கள் அதைச் சும்மா விடவில்லை, சண்டித்தனம் செய்யாதே என்று நையப்புடைத்தனர்.

நாள் தவறாமல் இவ்வாறே நடைபெற்று வந்தது. கடுமையான வேலை எதுவாயினும் உடனே அவர்கள் இந்தக் கருஞ்சிவப்புப் பொலிக் குதிரையை இழுத்து வந்து பூட்டிவிடுவார்கள். குதிரை சண்டித்தனம் செய்யுமாயின் சவுக்குகளாலும் இரும்புக் கம்பிகளாலும் ஈவிரக்கமின்றி அடித்து நொறுக்குவார்கள்.

பகற்பொழுது பூராவும் அதை ஓய்ச்சல் ஒழிவின்றி வேலை வாங்கினர். பிறகு இரவு வந்ததும் லாயத்துக்கு இழுத்துச் சென்று, வார்களை இழுத்துக் கூரையிலே கட்டிப் பொழுது விடியும்வரை அப்படியே அது தொங்கிக்கொண்டு நிற்கும்படிச் செய்தனர்.

குதிரைக்கு அவர்கள் தீனி போடவில்லை. அது வேலை செய்த காலம் முழுவதிலும், குளிர் காலத்தில் எப்பொழுதாவது உலர் புல்லில் ஒரு வாய் திருடித் தின்றதையும், கோடையில் எங்காவது வேலியோரத்தில் முட்செடிகள் தழைகளைக் கொறித்ததையும் தவிர, அதற்கு வேறு ஆகாரம் கிடைக்கவில்லை.

கருஞ்சிவப்புப் பொலிக் குதிரை இவர்களிடம் வந்து சேர்ந்த அதே நாளன்று இவர்களுடைய கொடிய பிரபு எங்கோ மாயமாய் மறைந்து விட்டார். அவருடைய மனைவி எங்கெல்லாமோ தேடிப் பார்த்தாள், அவர் கிடைக்கவே இல்லை.

ஓராண்டு ஓடி மறைந்தது. ஆரம்பத்தில் கண்ணுக்கு இனியதாய்க் கழுக்குமுழுக்கென்று வலுமிக்கதாகவும் கம்பீரமாகவும் இருந்த குதிரை ஆண்டின் முடிவில் எலும்பும் தோலுமாக இளைத்து ஒடுங்கி விட்டது. அதன் கண்கள் புதைந்துபோய் விட்டன, வாய் தளர்ந்து தொங்கிற்று விலா எலும்புகள் துருத்திக்கொண்டிருந்தன, முதுகு குழிவிழுந்து வளைந்து விட்டது, பிடரி முடிகள் சிக்குண்டு உயிரற்றனவாய்த் தொங்கின.

ஒரு நாள் இந்தக் குதிரை வெளிமுற்றத்தில் நிற்கக் கண்ட சீமாட்டி, ''இந்தக் கிழட்டுச் சனியனை எனக்குப் பார்க்கச் சகிக்கவில்லை, குடலைப் பிடுங்குகிறது! காட்டுக்கு இழுத்துச் சென்று இதைச் சுட்டுக் கொன்று விடலாம்'' என்று லாயக்காரனிடம் சொன்னாள்.

ஆனால் அது எப்படிப்பட்ட குதிரை என்பதை லாயக்காரனும் அறிந்திருக்க வேண்டும். அவன் அதைச் சுட்டுக் கொல்லவில்லை.

ஒரு முக்கிய விழா நாளன்று காலையில் எல்லோரும் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கையில் கருஞ்சிவப்புப் பொலிக் குதிரை லாயத்திலிருந்து அவிழ்த்துக்கொண்டு வெளியே வந்துவிட்டது. பிரபுவின் காய்கறிக் கொல்லைக்குள் புகுந்து அங்கிருந்த முட்டைக்கோசைத் தின்னத் தொடங்கிற்று.

அப்பொழுது வெளியே உலாவிக்கொண்டிருந்த சீமாட்டி காய்கறித் தோட்டத்திற்குள் வந்தாள். பார்க்கச் சகிக்காத கிழட்டுச் சனியன் அவசர அவசரமாய் முட்டைக்கோஸ் மடல்களைப் பிய்த்து விழுங்கிக் கொண்டு நிற்பதைக் கண்டாள்.

சீமாட்டிக்குப் பொல்லாத கோபம் வந்தது.

''அசட்டுப் பிராணியே! உருப்படாச் சனியனே! உனக்கு நல்லாய்ப் பாடம் கற்பிக்கிறேன், பார்!'' என்று கூச்சலிட்டாள்,

தடியை எடுத்து வந்து குதிரையின் தலையிலே மொத்தினாள்! என்னென்பது இந்த விந்தையை! உடனே அவர் எதிரே கூனிக் குறுகிக் கொண்டு நடுங்கியவாறு அவளுடைய கணவரான பிரபு நிற்கக் கண்டாள்

மெலிந்து தளர்ந்துபோன பரிதாபக் குரலிலே பிரபு முறையிட்டார்:

மனைவியே என்னை ஏன் மொத்துகிறாய்? முட்டைக்கோஸ் மடல்களில் இரண்டைப் பிய்த்துத் தின்றேன்—அதுகூடவா பொறுக்கவில்லை உனக்கு?......ஓராண்டாய்ப் பட்டினி கிடந்தபின் இந்த மடல்கள் முன்பு நான் அருந்திய அருட்சுவை உண்டிகளையெல்லாம் விட இனிமையாய் இருக்கின்றன!''

அவரை அடையாளம் தெரிந்ததும் சீமாட்டி பதறிப்போய் விட்டாள். பிரபு அடியோடு மாறிப்போய்ப் பார்க்கப் பரிதாபமாய் இருந்தார். குச்சியாய் முகமெல்லாம் கறுத்துப்போயிருந்தார். தாடியும் நகங்களும் நீளமாய் வளர்ந்திருந்தன, உடம்பெல்லாம் காயமும் வெட்டுமாய் இருந்தன, உடைகள் கந்தலாய்க் கிழிந்து தொங்கின.

இந்த நிலையில் வேறு யார் கண்ணிலும் படக்கூடாதென்று சீமாட்டி அவர் கையைப் பிடித்து அவசரமாய் வீட்டுக்குள் அழைத்துச் சென்றாள்,

அது முதல் பிரபு, தொழிலாளர்கட்கு மதிப்பளித்து நடக்கவும், தானும் எல்லோருடனும் சேர்ந்து உழைத்து வாழ்வதற்கும் பழகிக்கொண்டார். ★

## சொன்னார்கள் - சொல்கிறோம்

வரதராஜப்பெருமாள் இந்தியா சென்றது பற்றி பெரிதாகப் பேசியோர் சிறிமா ஈராக் சென்றதுபற்றிக் கேட்காதது ஏன்?

—வாசுதேவ நாணயக்கார

என்னை வரதராஜ நாணயக்கார என்று சொன்னாலும் சரி; அபூபக்கர் நாணயக்கார என்று அழைத்தாலும் பரவாயில்லை. நான் ஓர் இலங்கையன்; இனவாதியல்ல. இந்த நாடு பிரிவதனைத் தடுப்பதற்கு உள்ள ஒரே வழி மாகாணசபைதான்.

—வாசுதேவநாணயக்கார.

இனப்பிரச்சினை தீர்வுக்குத் தற்போது கிடைத்துள்ள சந்தர்ப்பத்தைச் சரிவர நடைமுறைப்படுத்தத் தவறினால் இந்த நாடு இரண்டாக அல்ல, அதற்கும் மேலாக உடையப்போவதை யாராலும் தடுக்க முடியாது போய்விடும்.

— யோகசங்கரி

வடக்கு — கிழக்கு மாகாணங்களின் மறுவாழ்வுப் பணிகளுக்கு வெளிநாடுகள் நன்கொடையாகக் கொடுக்கும் பணத்துடன் இலங்கை அரசாங்கம் தனது வரவு செலவுத்திட்டத்தில் 20 வீதத்தைச் சேர்த்துச் செலவிடவேண்டும் என்று இலங்கை—இந்திய ஒப்பந்தம் குறிப்பிடுகிறது.

வெளிநாடுகள் நன்கொடையாகக் கொடுத்துள்ள தொகை 52 கோடியே 70 இலட்சம் டொலர் ஆகும். இவற்றுடன் இலங்கை அரசின் வரவு செலவுத் திட்டத்தின் 20 வீதத்தையும், சேர்த்தால் 66 கோடி டொலர் ஆகிறது. இத்தொகை இலங்கைப் பணத்தில் இரண்டாயிரம் கோடி ரூபா ஆகும். ஆனால் இலங்கை அரசாங்கம் 38 கோடியே 70 இலட்சம் இலங்கை ரூபாவைத்தான் கொடுக்கத் தயாராக இருக்கிறது.

—வடக்கு— கிழக்கு முதலமைச்சர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாவிட்டால் வானம் ஏறி வைகுண்டம் போக என்ன பேச்சு?

## 84 முதல் 87 யூலை வரை பேச்சுக்களில் சொன்னவற்றைச் செய்யுங்கள் முதலில்

## அதிகாரங்களை மாகாணசபைகளுக்கு வழங்கு!

**இந்தியப் பயணத்தை ஒரு விவகாரமாக மாற்றிய நிலைமையைப் பற்றி நான் இங்கு சில விடயங்கள் குறிப்பிட வேண்டி ஏற்பட்டது. இதேவேளையில், இந்தியாவில் என்ன நடந்தது என்பது பற்றியும் கௌரவ உறுப்பினர்களுக்குச் சில விபரங்களைத் தெரிவிக்க வேண்டியது அவசியம் என்று கருதுகிறேன்—**

### வாய்ப்பைத் தவற விட்டால்-வருந்த நேரிடும்.

இந்தியாவின் பிரதம அமைச்சர் திரு.ராஜீவ் காந்தி, வெளிவிவகார அமைச்சர் திரு.நரசிம்மராவ், வெளிநாட்டு விவகார ராஜாங்க அமைச்சர் திரு.நட்வர்சிங், இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் திரு.கே.சி.பந்த் இவர்களோடு இந்த நாட்டிலுள்ள நிலைமைகள் குறித்துப் பேசினேன்.

இதெல்லாம் சும்மா சம்பிரதாயப் பூர்வமாக ''உங்களைப் பார்த்துவிட்டுப் போக வந்தேன்'' என்று அவர்களுக்குச் சொல்லிவிட்டு வந்ததாக இல்லை.

இந்த மாகாண சபையின் நிலைமை என்ன?

இங்கே சமாதானத்தினுடைய நிலைமை என்ன,

வடக்கு—கிழக்கு மாகாண அரசுக்கு மத்திய அரசாங்கத்தினால் எந்த வகையில் ஒத்துழைப்புக் கிடைக்கிறது, எந்தவகையில் கிடைக்கவில்லை,

அதிகாரப்பரவல் தொடர்பாக இருக்க வேண்டிய நிலைமைகள் என்ன என்று எல்லாவற்றையும் அவர்களுக்கு விளங்கப்படுத்தியிருக்கிறேன்.

அவர்களுக்கும் தெளிவாக முழுமையாக விளங்கியிருக்கிறது என்று கருதுகிறேன்.

அவ்வளவு தூரம் விரிவாக அவர்களுக்கு விளக்கப்பட்டிருக்கிறது.

இங்கே வடக்கு—கிழக்கு மாகாண அரசாங்கம் செயற்பட முடியாத நிலைமை ஒன்று ஏற்படுமாயிருந்தால்—

இந்தியாவும் இலங்கையும் செய்து கொண்ட ஒப்பந்தம் கடைசியில் விழலுக்கு இறைத்த நீராய் போவது மட்டுமல்ல,

இந்த ஒப்பந்தத்தின் அடிப்படைகள் அத்தனையுமே சீர்குலைந்து போய்விடும் என்பதனையும் அவர்களுக்குக் குறிப்பிட்டிருக்கிறேன்— விளங்கப்படுத்தியிருக்கிறேன்,

அது அவர்களுக்குக் கூறியது மட்டுமல்ல; இந்த சபையினூடாக இலங்கை அரசாங்கத்திற்கும் கூறி வைக்க வேண்டி இருக்கிறது.

இதைச் சரியாகப் புரிந்து கொள்ளாவிட்டால், இந்த நாட்டு மக்கள் பல வருடங்களுக்குப் பிறகு கவலைப்படுவதைத்தவிர எதுவும் செய்ய முடியாத நிலைமைக்கு உள்ளாக்கப்பட்டு விடுவார்கள்.

அந்த நிலைமை ஏற்பட்டுவிடக் கூடாது என்ற பொறுப்புணர்வோடு தான் முன்கூட்டியே இந்த விடயங்களைச் சொல்லவேண்டியவனாக இருக்கின்றேன்.

இந்திய அரசாங்கத்தினுடைய அமைச்சர்கள் இந்த விடயங்களைத் தெளிவாகப் புரிந்து கொண்டது மட்டுமல்ல—

தாங்கள் எந்த அடிப்படையில் இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்களோ, அந்தப் பொறுப்புணர்வோடு செயல்படுவதாகவும் உத்தரவாதமளித்திருக்கிறார்கள்

கையெழுத்திட்டதற்குத் தக்கபடி அவர்கள் செயற்படுவார்கள் என்று நம்புவதற்கு இடமிருக்கிறது என்பதை இந்த சபையில் கௌரவ உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### இந்த நாட்டைக் காப்பாற்றுவோம்!

இதை எப்படி அவர்கள் செய்யப் போகிறார்கள் என்பது இன்னும் முழுமையாக்கப்படாத ஒரு விடயமாக உள்ளது.

## வடக்கு-கிழக்கு மாகாண சபையில் முதலமைச்சர் அ.வரதராஜப்பெருமாள், தமது இந்தியப் பயணம் தொடர்பாக ஆற்றிய விளக்கவுரையிலிருந்து ஒருபகுதி

நான் மூன்று விடயங்கள் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன்.

1.அதிகாரப் பரவலாக்கல்

2.புனரமைப்பு, அபிவிருத்தி

3.சட்டம் ஒழுங்கு பாதுகாப்பு

அதிகாரப் பரவலாக்கல் முறையாக நடைபெறாத காரணத்தால் புனரமைப்பு புனர்வாழ்வு வேலைகள் முழுமையான அளவிலும் சரியான முறையிலும் மேற்கொள்ளப்பட முடியாத நிலைமைகள் உள்ளன.

அதேபோன்று அதிகாரப் பரவலாக்கல் ஒழுங்காக முறையாக நடத்தப்படாமையால் சட்டமும் ஒழுங்கும் இங்கு நிலைநாட்டப்பட முடியாமல் இருக்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

எனவே இந்த மூன்று விடயங்கள் தொடர்பாகவும் இந்தியாவின் நட்புதவி தேவைப்படுகிறது என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறேன்.

துரிதமான நடவடிக்கைகள் நடைபெறவேண்டும் என்ற அக்கறையோடுதான் இந்த விடயங்கள் அவர்களுக்கு எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது.

சிலர் நினைக்கிறார்கள் இதையெல்லாம் இந்தியாவிடம் போய்க் கூறிக்கொண்டிருப்பதால் பிரச்சினையைதான் உருவாக்கும் என்று.

உண்மை அதுவல்ல.

இதில் பொறுப்பீனமாக நடந்து கொண்டதால்தான் இந்த நாடு மிகச் சீரழிவுக்குத் தள்ளப்படும்.

அது ஏற்பட்டுவிடக்கூடாது என்ற நோக்கத்தோடு மேற்கொள்ளப்பட்டிருக்கிற கடமைதான் எங்களது கடமை.

இந்திய அரசாங்கத்தோடு நடத்திய பேச்சுவார்த்தையின் விளைவாகவோ என்னவோ

இலங்கை ஜனாதிபதி தானே நேரடியாக இந்த விடயத்தில் ஈடுபட்டு இருக்கக்கூடிய தடைகளை நீக்கித் தருவதாக உத்தரவாதமளித்திருக்கிறார்.

ஆனால், ஏற்கனவே நான் கூறியிருக்கிறேன்— இந்த நாட்டினுடைய ஜனாதிபதியை ஏழு தடவைகள் சந்தித்திருக்கிறேன்.

ஏழுதடவைகளிலும் இப்படியான வாக்கியங்களை நான் காதால் கேட்டிருக்கிறேன்.

ஆனால், இந்தத் தடவை வெறும் வாக்கியமாய் இருந்துவிடாது என்று நினைக்கிறேன்,

ஏனென்றால், அது நடக்காவிட்டால் மீண்டும் நான் டெல்லிக்குத்தான் போகவேண்டி இருக்கும்.

எனவே—

மத்திய அரசாங்கத்தில் இருப்பவர்களும் சரி,

பேரினவாத அரசியலைக் கையாண்டு குழப்பங்களை விளைவிப்போரும் சரி,

தமிழ் பேசும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் திருகோணமலை நகரத்திலே வடக்கு—கிழக்கு மாகாணசபை' என்ற பெயர்ப் பலகையைப் போட்டுக்கொண்டு தேத்தண்ணிக்கடை நடத்தவில்லை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

### பகிர்ந்து வாழச் சொல்லித் தர வேண்டும்!

இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு.நரசிம்மராவ் அவர்களுடன் பேசுகிற பொழுது—



''மாகாண சபைக்கு உரித்தான அதிகாரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு மூன்று மாதங்களாக மீண்டும் மீண்டும் முயற்சிக்கிறேன். ஆனால் எனக்கென்னவோ என்னுடைய பார்வையில் அரசாங்கத்தில் இருப்பவர்களுக்கும் சரி அதிகாரத்தில் இருப்பவர்களுக்கும் சரி மனரீதியில் மாற்றம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை'' என்றதற்கு அவர் சொன்னார்;

''இல்லையில்லை, நீங்கள் அப்படி நினைக்க வேண்டாம், சிலவேளை இந்த அமைப்பு புதியது என்பதனால் எப்படிச் செய்வது என்றுகூடத் தெரியாமல் இருக்கக்கூடும்'' என்று.

நான் சொன்னேன் ''அப்படியே எடுத்துக் கொள்வோம்.

இந்த விடயத்தை ஒரு கெட்ட பக்கத்திலிருந்து பார்க்காமல், இலங்கை மத்திய அரசாங்கத்திலுள்ளவர்கள் அதிகாரப்பரவலாக்கலை எப்படிச் செய்வது என்பது பற்றிச் சரியாகத் தெரியாததால்தான் இப்படி நடந்துகொள்கிறார்கள் என்று எடுத்துக்கொண்டு—

மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கமும் எப்படிச் செயல்பட வேண்டும்?

அதிகாரங்கள் பரவலாக்கப்படுவது எப்படி?

அதிகாரங்கள் எப்படிக் கைமாற்றப்படுவது என்றும், வரக்கூடிய சிக்கல்கள் எப்படித் தீர்க்கப்படுவது என்றும் அனுபவமுடைய நாலு அல்லது ஐந்து பேர்களையாவது நீங்கள் கொழும்புக்கு அனுப்ப வேண்டுமெனக் கேட்டிருக்கிறேன்.

விடயங்கள் சுமுகமாக நடந்தாக வேண்டும் என்பதே எமது நோக்கம் என்பதை இந்த நாட்டிலுள்ள எல்லோரும் அறிந்து கொள்ள வேண்டும்.

இந்த மாகாண அரசாங்க அமைப்பு சீர்குலைந்து போகுமாயிருந்தால்—

இந்த நாட்டில் இரத்த ஆறு ஓடுவதைத் தவிர வேறெதனையும் யாரும் உற்பத்தி செய்துவிடமாட்டார்கள்;

இந்த நாட்டினுடைய ஒற்றுமை சிதைந்து போகுமேதவிர, வேறு யாரும் அதைச் சீர்படுத்தி விடமாட்டார்கள்.

இந்த நாட்டிலுள்ள தமிழ்பேசும் மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகள் மதிக்கப்பட்டு, சுயநிர்ணய உரிமைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டுப் பிரச்சிகள் தீர்க்கப்பட வேண்டும் என்றுதான் ஒரு பிரிவினைப் போராட்டம் எழுந்தது.

அது மீண்டும் எழுந்து தலைதூக்கி திரும்பவும் இரத்த ஆறு ஓடி, மீண்டும் இந்த நாட்டினுடைய அமைதி நிரந்தரமாகக் குலைந்துபோய்விடக் கூடாது என்ற அக்கறையோடுதான் அந்த முயற்சிகளை மேற்கொள்கிறோம் என்பதனை இந்த நாட்டிலுள்ள அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

### பக்குவம் என்பது பலவீனம் அல்ல.

இந்தியாவில் இருக்கிறமாதிரியான ஒரு அமைப்பை இலங்கையில் ஏற்படுத்தி, ஆகக்கூடுதலான உரிமைகளையும் எடுத்துத் தருவதாக இந்திய அரசாங்கம் சொல்லியிருக்கிறது.

இந்தியாவில் இருக்கக் கூடிய எதிர்க் கட்சிகளும் சரி மாநிலக்கட்சிகளும் சரி இந்தியாவிலுள்ள அதிகாரப் பரவலாக்கலில் அவர்களே திருப்தியாக இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரி இந்தியாவில் இருப்பது மாதிரியான அமைப்பு முறையையாவது கொண்டு வாருங்கள் முதலில்,

அதற்கு மேல் உரிமைகளைப் பெற்றுக்கொள்கிற வழி முறைகளை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்.

யாரும் தங்களது பொறுப்புக்களை விட்டு நகர்ந்து போய் விடமுடியாது.

குழப்பங்களை ஏற்படுத்தி, நாங்கள்தான் குழப்பகாரர்கள் என்று சொல்லிவிட்டுத் தப்பி விடுவதற்கு முடியாது.

தீர்வு ஒன்று இல்லாமல் சும்மா போகவிட்டுவிடமாட்டோம்.

நாங்கள் புலிகளும் இல்லை அல்லது வெறும் பாராளுமன்றக் கட்சியும் இல்லை,

இரண்டும் எங்களிடம் இருக்கிறது

போராடவும் தெரியும்,

ஒரு அரசாங்கம் செயற்படமுடியாமல் இருந்தால் செயற்படும் அரசாங்கத்தை உருவாக்கவும் முடியும்.

ஆற்றல் இருக்கிறது.

ஆனால், அப்படி ஏற்படுத்தக் கூடாது என்கின்ற நல்ல மனோபாவத்தைப் பலவீனமாக யாரும் கருதி விடக்கூடாது.

எனவே, இந்திய அரசும் இலங்கை அரசும் தங்கள் பொறுப்புக்களை இங்கே சரிவர நிறைவேற்றியாக வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

## இந்தியப் படைகள் திரும்பிச் செல்லட்டும்!

அடுத்ததாக. இந்தியப் படைகள் இந்தியாவிற்குத் திருப்பி அழைக்கப்படவேண்டும் என்ற கோரிக்கை

இது இந்தியாவிலும் பிரச்சினை; இலங்கையிலும் ஆங்காங்கே குரலெழுப்பப் படுகிறது.

புலிகளும் சொல்கிறார்கள் 'அந்நிய நாட்டுப்படைகள் இருக்கின்றது, ஆதலால் நாங்கள் சண்டை பிடிக்கின்றோம்' என்று,

நல்லது, அந்நிய நாட்டுப்படைகள் இருக்கின்றபடியால் தானே சண்டை? இல்லாவிட்டால் சண்டை பிடிக்க மாட்டீர்கள்தானே,...

இந்தியாவிலும் தங்களுடைய படைவீரர்கள் இலங்கையில் பேரய்ஏன் சாகவேண்டும் என்ற அங்கலாய்ப்புகளெல்லாம் இருக்கின்றது,

ஆனபடியினால், இந்தியப் படைகள் இங்கிருந்து போகவேண்டும் என்று சொல்லுபவர்கள்—

அது நடைமுறைப்படுத்தப்படவேண்டுமானால், தமிழ் பேசும் மக்களுடைய பாதுகாப்பை உத்தரவாதப் படுத்துவதற்கும்.

வடக்கு கிழக்கு மாகாணத்திலே சட்டமும் ஒழுங்கும் அமைதியும் சரியான முறையில் நிலைநாட்டுதற்குரிய ஒரு மாற்றுப்படையை ஏற்படுதும் முயற்சிகளில் கவனம் செலுத்த வேண்டும்

இந்திய அமைதிப்படையின் உண்மையான கடமைகளைத்தாங்கி எடுத்து செல்லக்கூடிய அமைப்பு ஒன்று இங்கே உருவாக்கப்பட்டால்தான் ஐ.பி.கே.எப் இங்கிருந்து வெளியேறுவது சாத்தியமானதாகும்.

இந்தியப் படைகளை எவ்வளவு விரைவாக வெளியேற்றுவது என்பது அதற்குரிய மாற்றுப்படையை உருவாக்கும் வேகத்தில்தான தங்கியிருக்கிறது.

இந்தியப் படையினுடைய இருப்பு பின்வாங்கல்கள் சம்பந்தப்பட்ட விடயம்—

இந்த மாகாண அரசாங்கத்திற்கு தேவைப்படுகின்ற சட்டம்' ஒழுங்கிற்கான நிர்வாகத்தை உருவாக்குவதோடு தொடர்புடையது.

எனவே அது தொடர்பாகவும் நான் இந்திய அரசாங்கத்திடம் விளகியிருக்கிறேன்.

## 20000 மில்லியனும் பூசாரியும்

அடுத்தது, புனர்வாழ்வு புனரமைப்பு விடயங்கள்.

ஒரு வெளிநாட்டு மாகாண அரசாங்கத்தினுடைய பொருளாதாரம் பற்றிய இந்திய யத்திய அரசாங்கத்துடன் பேசலாமா?

வடக்கு கிழக்கு மாகாணம் எஎன இந்தியாவினுடைய மாகாணமா? என்றெல்லாம் கேட்கப் பார்க்கிறார்கள்.

எங்களுக்குத் தெரியும், இது இந்திவாவினுடைய மாகாணம் இல்லையென்பது,

ஆனால் இங்கு நிலைமைகள் அப்படியிருக்கின்றன, என்ன செய்வது

புனர்வாழ்வு புனரமைப்பு தொடர்பாக இந்த மாகாண அரசாங்கத்திற்கு இருபதாயிரம் மில்லியன் ரூபா நிதியை மத்திய அரசாங்கம் ஒதுக்க வேண்டும்,

382 மில்லியன் ரூபா மட்டும் இந்த ஆண்டிற்கு என்று விநியோகிக்கப்பட்டிருக்கிறது,

ஒரு வருடத்திற்கு ஒதுக்கினால் என்ன' பத்துவருடத்திற்கு ஒதுக்கினால் என்ன. 20.000 'மில்லியனுக்கும்மான கணக்கு எங்களுக்குத் தெரிந்தாகவேண்டும்

ஏனென்றால். வெளிநாடுகள் வடக்கு கிழக்கு மாகாணத்தின்கென்று ஒத்துக்கொண்டுள்ள தொகை அது.

ஏதோ எங்களுக்குப் பிச்சை போடுவதுபோல இங்கு தரவேண்டிய அவசியமில்லை.

வடக்கு கிழக்கு மாகாண பிரதேசத்திற்கு என்று சொல்லி வெளிநாடுகளால் ஒதுக்கப்பட்டுள்ள நிதி பற்றியும், அதற்குரியவான நிலைமைகள் பற்றியும் எங்களுக்குத் தெளிவான விளக்கம் தேவை.

அதை யார் பயன்படுத்துவது என்று முடிவு செய்யவேண்டும்.

அதைப் பயன்படுத்துகிற பொறுப்பும் முடிவுசெய்யும் அதிகாரமும் எங்களுக்குரியதாக இருக்கும்.

இதுதான் புனரமைப்பு தொடர்பான விடயத்தில் எங்களுடைய நிலைப்பாடு.

இப்படியெல்லாம் பிரச்சினை கிளறிறியதற்குப் பிறகு—

வடக்கு கிழக்கு மாகாணத்திற்கென்று வெளிநாடுகளால் ஒத்துக்கொள்ளப்பட்டுள்ள நிதி அவ்வளவும் வடக்கு கிழக்கு மாகாண அரசாங்கத்திற்குரியதான முடிவுக்கு விடப்படும் என்று அவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.

இதை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும்,

## தேசிய புனரமைப்பு

புனரமைப்பிற்கான உதவிகளையும் இந்தியாவிடம் கேட்டிருக்கிறேன்

என்னதானிருந்தாலும், இந்தியா மூன்றாம் உலகநாடுகளில், தன்னியல்பாக தனக்குள்ளே இருக்ககூடிய ஆற்றலோடு ஒரு மாற்றுத் தொழினுட்பத்தோடு வளர்ந்திருக்கக் கூடிய ஒரு நாடு. இன்று பொருளாதார வல்லமையோடு அது இருக்கின்றது,

அதிலே இருக்கக்கூடிய தொழினுட்பத்தை நாங்கள் பயன்படுத்திக் கொள்வதன் மூலம், எங்களுடைய பொருளாதாரத்திற்கு ஏற்ற நிலைமையில் நாங்கள் வளர்வது சாத்தியமாக இருக்கும்.

சடந்த 17 வருடங்களாக இந்த் நாட்டினுடைய ஆட்சியாளர்கள் இந்த நாட்டை—

பக்கத்திலே விற்றால்கூடப் பரவாயில்லை; ஜேர்மனிக்கும், ஜப்பானுக்கும், அமெரிக்காவுக்கும் விற்றுப் போட்டார்கள்.

அதிலிருந்து மீட்கவேண்டிய கடமையும் எங்களுக்கு இருக்கிறது என்ற உணர்வோடும் சில உடன்பாடுகளை நாங்கள் இந்தியாவோடு செய்துகொள்ள முடியும்.

சாரணம், குறைந்த விலையில் இருக்கக் கூடியதான இயந்திரங்கள், தொழினுட்பங்கள்—

இந்த நாட்டிற்குப் பொருத்தமாக இருக்கக்கூடிய மாற்றுத் தொழினுட்பத்தை நாங்கள் பயன்படுத்துதல் என்பது எங்களுடைய சுயமான பொருளாதார வளர்ச்சிக்கு வழிகோலும்— ஊன்று கோலாக அமையும்.

எங்களுடைய மாகாணத்தில் செய்யப்படுவதற்கு ஒப்புக் கொள்ளப் படவேண்டிய திட்டங்களாக—

மிகப் பாரிய அளவிலான வீடமைப்புவேலை,

விவசாயத்தை முழுமையாகப் புனரமைத்தல்,

மீன்பிடித்துறையைப் புனரமைத்தல்,

கிராமியக் கைத்தொழில்களைப் புனரமைத்தல்,

கால்நடைப் பண்ணை வளர்ப்பு

இவற்றை வளர்த்து எடுப்பதற்கு இந்தியாவினுடைய தொழினுட்பத்தை நாங்கள் எங்களுடைய நாட்டிற்கு மாற்றிக் கொள்வதற்கான வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற அக்கறையோடு சில முயற்சிகளையும் நாம் மேற்கொண்டிருக்கிறோம்.

## மூத்த சகோதரருடன் பேச்சுவார்த்தை

14ந் திகதி தமிழ் நாட்டின் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் தன்னுடைய மாநிலம் சம்பந்தப்பட்ட விடயங்களுக்காக டெல்லிக்கு வந்திருந்தார்.



அவரைச் சந்திக்கும் வாய்ப்பும் ஏற்பட்டது.

'தமிழ் பேசும் மக்கள் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டும், தமிழ் மக்களுக்கு ஓர் அமைதியான வாழ்க்கை நிலை ஏற்படுத்தப்பட வேண்டும், அழிவுகளுக்கு வழிவகுக்காமல் ஒற்றுமையையும் அமைதியையும் எவ்வளவு விரைவாக ஏற்படுத்த முடியுமோ அதுதான் தன்னுடைய அக்கறை' என்று எடுத்துச் சொன்னார் கலைஞர்.

தொடர்ச்சி 7ம் பக்கம்

## குறிஞ்சிச் சாரல்

### எழில் நிறை மலையகம்

இயற்கை எழில் நிறைந்தது
எம் மலையகமாம்—அங்கே
இலைத்தளிரை ஏந்தி
நிற்கும் தேயிலையாம்
திக்குத் தெரியாத
தேரிகளாம்— அருகே
தேம்பி வழிகின்ற
அருவிகளாம்......

மட்டமில்லாத மலை
மேடுகளாம்—அங்கு
மகிழ்ந்து நடக்க சிறு
நோட்டுக்களாம்
எட்டி நடக்கின்ற
போதிலுமே! எம்மை
முட்டி மோதுகின்ற
பாறைகளாம்
விண்ணைத் தொடும்
உயர மாமரங்கள்—பக்கம்
விருந்து கொடுக்கின்ற பூமரங்கள்
பூமரத்தில் பல
பூங்குயில்கள்—அவை
பூபாளம் பாடுகின்ற
புள்ளினங்கள்

ஓங்கி வளர்ந்த
உயர் காடுகளாம்—அங்கே
உல்லாசமாய்த் திரியும்
ஊர்வனவாம்
பார்க்கப் பல வர்ணப்
பறவைகளாம்—அவை
பாசம் பகிர்ந்திடும்
சோடிகளாம்......


சோகம் தணிந்திடும்
சோலைகளாம்—அங்கே
சொக்க வைக்கும்
மலர் வாசனையாம்
அற்புதங்கள் வழங்குமிடம்
மலையகமாம்—அது
அழகு தமிழ் கவிபாடும்
கலையகமாம்.........

—— செல்வி.யோகா கிருஷ்ணசாமி

## எச்சரிக்கை!

மலையகப் பகுதிகளில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பெயரைப் பயன்படுத்திச் சில விஷமிகள் மக்களை ஏமாற்றி வருவதாக அறிகிறோம். தங்களை ஈ.பி.ஆர்.எல்.எப் ஐச் சேர்ந்தவர்கள் என்று ஒன்றுமறியாத அப்பாவி மக்களிடம் அறிமுகப்படுத்திக் கொள்ளும் ஏமாற்றுப் பேர்வழிகள் சிலர், 'ஆசிரியர் வேலை வாங்கித் தருவதாகவும், வடக்கு கிழக்கு மாகாண அரசாங்கத்தில் உத்தியோகம் எடுத்துத் தருவத்தாகவும் சொல்லிப் பணம் வசூலிப்பதாகவும் தகவல்கள் வருகின்றன. இந்த நபர்களைக் கண்டு பிடித்துப் பொலிசாரிடம் ஒப்படைக்கும் அதே வேளை, இத்தகைய ஏமாற்றுக்காரர்களின் வலையில் சிக்கிவிட வேண்டாம் என்று மக்களை அன்போடு கேட்டுக் கொள்கிறோம், உங்களுக்கு உதவி செய்வதற்கென்று சொல்லிப் பணம் கேட்பவர்கள், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணித் தோழர்கள் இல்லை என்பதை உறுதிப்படுத்துவதோடு, அத்தகைய நபர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் எங்களுக்கு ஒத்துழைப்புத்தர வேண்டும் என்றும் மக்களைக் கேட்டுக்கொள்கிறோம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உளறுவாயனின் கனவுத்தேர்

நெஞ்சில் இருக்கிற முழுதையும் சொல்லுங்க எண்டு கிருஷ்ணர் கேட்டபோது, பாஞ்சாலி எனக்கு கர்ண மகாராஜா மேலேயும் ஆசை எண்டாளாம்! நானும் உளற ஆரம்பிச்சால் இப்பிடித்தான் நல்லது கெட்டது எண்டு எல்லா ஆசைகளும்தான் நெஞ்சில் புரளுது. புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் நடக்கிற பேச்சுவார்த்தை வெற்றியடைஞ்சு, புலிகள் ஆயுதங்களைப் போட்டுவிட்டு ஜனநாயக வழிக்கு வந்திட்டினமெண்டால் எப்படியெண்டு யோசிச்சுப் பார்த்தன் ஒ ஓசோக்காய்தான் இருக்கு, சரி சாசா பணமா, நீங்களுந்தான் இப்படி நல்ல பக்கத்தாலை கற்பனை பண்ணிப் பாருங்கோவன்! யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்......

தமிழீழப் பிரதேசத்தில் இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்குப் பிறகு பெரும்பாலும் சிறீலங்கா இராணுவம் முகாம்களுக்குள் அடை கொண்டு விட்டது, ஆங்காங்கே சிற்சில திமிறல்களும் இந்திய அமைதிப் படையால் கண்டித்து அடக்கப்பட்டு விடுகிறது. ஆக மொத்தத்தில் ஒப்பந்தத்தின் பின் இதுநாள்வரையும் நாங்கள் அமைதி காக்க வந்த இந்தியப் படையோடு யுத்தம் செய்து கொண்டிருந்ததன் விளைவாகவே நாட்டில் அமைதி நிலை தோன்ற முடியாமற் போயிருந்தது. நாங்கள் சண்டையைத் தொடர்ந்து கொண்டிருப்பதால் இந்தியப் படைகள் திரும்பிச் சென்றுவிடப் போவதில்லை என்பது உண்மைதான் இப்போது ஆயுதங்களைப் போட்டுவிட்டதால், குவிந்து கிடக்கும் இந்தியப்படையில் பெருமளவு திரும்பிச் சென்றுவிடும் இந்திய அவதானிப்பு இங்கே இனி உன்னிப்பாக இருக்குமென்பதால் இலங்கை இராணுவமும் தமிழ்ப்பகுதிகளில் வாலாட்டுவதற்கு முடியாது. இல்லாவிட்டாலும்தான் எல்லா இயக்கங்களும் ஒன்று சேர்ந்து நிற்கப் போகின்றதே, தமிழ் மக்களை யார் என்ன செய்து விடமுடியும்? எல்லா இயக்கங்கள் கட்சிகளைச் சேர்ந்தவர்களும்; ஏன் அனைத்து மக்களும் கூட நாங்கள் ஜனநாயக வழிக்குத் திரும்புவதை வரவேற்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் நாம் தொடர்ந்தும், புதிதாய் எதிரிகளாக்கிக் கொண்ட இந்திய அமைதிப் படையினருக்கெதிராகச் சண்டையிட்டுச் செத்துக் கொண்டிருப்பதும். அமைதிக்கு ஏங்கும் மக்களுக்குத் துன்ப துயரங்களைச் சுமத்தி அந்தரிக்க வைப்பதும் போதும் போதும். இனிச் சமாதானமான மறுவாழ்வுப் பணிகளின் மூலம் மக்களுக்கு......இவ்வாறு நீள்கிறது விடுதலைப் புலிகளின் அறிக்கை.

ஈரோஸ்காரர்கள் விடுவார்களா இந்தச் சந்தர்ப்பத்தை விறுவிறென்று பன்னிரண்டு பக்கங்களில் டாராட்டியும் ஆங்காங்கே புலிகள் விட்ட பிழைகளைச் சுட்டிக் காட்டியும் உடனேயே அதற்குச் சமாதானங்கள் சொல்லியும், பன்னிரண்டாவது பக்கத்தில் முடிக்கும்போது புலிகள் ஜனநாயக வழிக்குத் திரும்பியதை வரவேற்கிறார்களா இல்லை பிழையென்று சொல்கிறார்களா அல்லது பிழையும் சரியும் சரிவிகிதத்தில் கலந்திருப்பதாக முடிவு செய்திருக்கிறார்களா என்று கண்டுபிடிக்க முடியாதவாறு பத்திரிகைக்கு அறிக்கை விடுகிறார்கள். இது தவிர, தனியாக உட்சுற்றுக்கு மட்டும் என்று இரகசியமாக, புலிகள் ஜனநாயக வழிக்கு வந்ததில் ஈரோசுக்குள்ள சாதகபாதகநிலைமைகள் என்னென்ன என்றெல்லாம் அலசி ஒரு முப்பது பக்க அறிக்கை கடைசியில் ஈரோசின் நிலைப்பாடு எண்டு எதைச் சொல்லுறதென்று தெரியாமல் குழம்பிப்போகும் ஈரோஸ் உறுப்பினரும் மக்களும் அறிக்கையிலேயே திரும்பவும் தேடுகிறார்கள்:

''புலிகளைப் பேச்சு வார்த்தைக்கு அழைத்து வருகிறோம், ஜனநாயக வழிக்குத் திரும்பவைத்து நிரந்தர அமைதியும் நீடித்த சமாதானமும் ஏற்படுத்துவோம் என்று ஏற்கனவே மக்களுக்கு ஆணையிட்டுச் சொல்லியிருந்தோம் மக்கள் கேட்டுக்கொண்டதன் பேரில் புலிகளிடமிருந்து ஆயுதங்களைக் களைய முயற்சி எடுத்துச் செயற்பட்டோம், வெற்றியடைந்திருக்கிறோம், இனி அந்தப் பக்கம் நாம் போய் பேச்சு வார்த்தைகளைத் தொடர மாட்டோம் என்று மக்களுக்கு உறுதியளிக்க நினைக்கிறோம். பாராளுமன்றம் போய் எமது மக்களின் உரிமைகளைத் தட்டிக்கேட்க முடியுமென்றால் மட்டும் அங்கு போக உத்தேசித்துள்ளோம். ஏனென்றால், வடக்கு கிழக்கில் அமைதி நீடிப்பதற்கு புலிகளும் ஐ.பி.கே.எவ், உம்தான் பேசவேண்டும். சிறிலங்கா அரசுடன் பேசிவிட்டு இந்தியப் படைகளைத் திருப்பியனுப்புவது எமது மக்களின் பாதுகாப்புக்கு உகந்ததல்ல, அர்த்தமற்ற இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தி அர்த்த புஷ்டியான சமரச நடவடிக்கைகளை எடுத்துப் புலிகளுடன் பேசுமாறு நாம் இந்தியத் தலைவர்களை வலியுறுத்துவோம். புலிகள் இல்லாமல் சமாதானம் இல்லை இருந்தாலும் சமாதானம் இல்லை; ஆகவே புலிகளுடன் பேசி பேச்சுக்கு அழைத்துவர வேண்டும். ஆனால் புலிகள் தங்கள் விசயத்தில் யாரையும் தலைப் போட அனுமதிக்கமாட்டார்கள். என்னதானிருந்தாலும் ஜனாதிபதி அவர்களுடன் பேசி புலிகள் இணக்கப்பாட்டுக்கு வந்திருப்பது எல்லோருக்கும் மகிழ்ச்சியான விடயமே.........''
இவ்வாறு ஈரோசின் அறிக்கை தொடர்கிறது.

ஈ.பி.ஆர்.எல்.எவ் காரர்கள் மட்டும் பார்த்துக் கொண்டிருப்பார்களா என்ன? ''புலிகள் ஆயுதங்களைப் போட்டுவிட்டு ஜனநாயக வழிக்குத் திரும்பவேண்டும் என்று கடந்த ஒருவருடமாக வலியுறுத்தி வந்திருக்கிறோம். புலிகளின் இந்த நல்ல முடிவானது தமிழ்பேசும் மக்களின் நலனில் அக்கறையுள்ள அனைவருக்கும் மகிழ்ச்சி தருவதாகும் அனைவரும் ஒன்றுபட்டு இந்த மண்ணில் ஐக்கியம், சமாதானம், ஜனநாயகம் ஆகியவற்றை நிலைநாட்ட.........''
இவ்வாறு நீள்கிறது அந்த அறிக்கை.

எக்குத் தெரியும் இப்ப உங்களுக்கெல்லாம் என்னைத் திருதராஷ்டிர ஆலிங்கனமாய் கட்டிப்பிடிச்சு நொறுக்க வேணும்போல இருக்கும். ஆனால் என்ரை கனவு காணும் உரிமையைப் பிடுங்கி விடாதீர்கள். ஏனெண்டால் நித்திரையில் மட்டும்தான் நான் உளறுவதில்லை.

## பத்திரிகை அறிக்கைகள்

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு.M,பஞ்சலிங்கம் கொலை செய்யப்பட்டது எமக்கு ஆழ்ந்த அதிர்ச்சியையும், வேதனையும் அளிக்கின்றது. யாழ்ப்பாண மாவட்டம் மிகவும் நெருக்கடியான சூழ்நிலைக்குள் இருந்த காலகட்டத்தில் தனது உயிரையும் மதிக்காது யாழ்மாவட்டமக்களுக்கு சேவை செய்ததை நாம் நன்றியுடன் நினைவுகூர்கின்றோம். அராஜகசக்திகளால் நிர்வாக சீர்குலைப்புகள் நடந்த காலங்களிலும்கூட அவர் தன்னால் இயன்றவரை மக்களுக்குச் சேவை செய்துவந்தார் என்பதையும் நாம் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த ஜொனி, குமார் காண்டீபன், ரகு ஆகியோரே அரசாங்க அதிபரைச் சுட்டுக் கொல்வதற்காகச் சென்றிருந்தவர்கள் என்று தெரியவருகிறது,

கடந்த காலங்களில், பாடசாலை அதிபர்கள் உதவி அரசாங்கஅதிபர்கள், சமூகசேவகர்கள்...இப்படிப் பலரை அராஜகசக்திகள் பலிகொண்டுள்ளனர். இந்தவரிசையில் யாழ் அரசஅதிபரும் கொலை செய்யப்பட்டுள்ளார். சிறந்த கல்விமான், நிர்வாகிகளை இழக்கலாம், ஆனால் அப்படியானோரை உருவாக்குவது என்பது மிகவும் கடினம் என்பதைச் சம்பந்தப்பட்டோர் புரிந்துகொள்ளவேண்டும். நாட்டில் அராஜக சக்திகள் எதனைச்சாதித்துக் கொள்ளப்போகிறார்கள்?

இத்தகைய பிரமுகர்களின் மீதான பயங்கரவாதமானது, எங்கள் பிரதேசத்திலிருந்து படித்தவர்களையும் அறிஞர்களையும் சிறந்த நிர்வாகிகளையும் வெளிநாடுகளுக்கு ஓடச்செய்வதாகவே அமையும். இனியும் தமிழ் மக்கள் இத்தகைய இழப்புக்களை மௌனமாக ஏற்றுக் கொள்ளப் போகிறார்களா?

மக்கள் வாய்மூடி மௌனிகளாக இருப்பதைவிடுத்து. இவர்களுக்குச் சரியான பாடம் புகட்டும்வரை நாம் இன்னும் பலரை இவ் அராஜக சக்திகளுக்குப் பலிக்கடாவாக வேண்டி இருக்கும். எனவே, இப்படியான அநாகரீகமான காட்டுமிராண்டித்தனமான கொலைகளுக்கெதிராக மக்கள் ஒருமித்துக் குரல் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

திருகோணமலை குண்டுவெடிப்பு, வெலிஓயா படுகொலை ஆகியவற்றின் தொடர்ச்சியாக தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணம் கந்தர்மடத்திற்கு அருகாமையிலுள்ள ஆலடிச் சந்தியில் பாரிய குண்டொன்றை வெடிக்க வைத்ததின் மூலம் பன்னிரண்டுபேர் கொடூரமான முறையில் சொல்லப்பட்டுள்ளனர்; 26 பேர் படுகாயமடைந்து கை கால்களை இழந்த நிலையிலும் யாழ். ஆஸ்பத்திரி அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்; பல சடலங்கள் அடையாளம் காணமுடியாதவாறு உருக்குலைந்துள்ளது.

இதற்கு முன்னர் யாழ். பஸ் நிலையத்திலும், யாழ். கச்சேரியடியிலும் —குண்டுகளை வெடிக்கவைத்துப் பல அப்பாவிப் பொதுமக்களின் உயிரிழப்பிற்கும், உடல் ஊனத்திற்கும் காரணமாயிருந்தவர்கள், பஸ்வண்டியில் வந்த பயணிகளை அச்சுவேலியில் வைத்துப் படுகொலை செய்தவர்கள் இன்னமும் தங்கள் கொலைவெறியைத் தணித்துக்கொள்ளவில்லை என்பது கவலைக்குரியது. திருகோணமலை குண்டு வெடிப்பில் 25 சிங்கள மக்களையும், 17 தமிழர்களையும் 4 முஸ்லிங்களையும் கொன்று குவித்து அந்த இரத்தம் காயுமுன்னரே யாழ்ப்பாணத்திலும் மக்கள் படுகொலைகளைப் புலிகள் நடத்தியுள்ளனர். இத்தகைய படுகொலைகள் தடுத்து நிறுத்தப்படாமல் பயத்தினாலும் அக்கறையின்மையினாலும் மௌனமாயிருப்பதானது எமது சமுதாயத்தைக் காட்டுமிராண்டி நிலைக்கு இட்டுச் செல்ல நாம் அனைவரும் உதவுவதாகவே அமையும்.

புலிகள், எந்தவிதமான நல்ல அர்த்தங்களையும் புரிந்துகொள்ள முடியாதவாறு இந்தக் கொலைகளை நிகழ்த்துவதற்கு என்ன காரணம்? புலிகளுக்கு UNP அரசாங்கத்தினுடாக ஆயுதங்கள் கிடைக்கின்றன என்ற தகவலுக்கும் இந்தப் படுகொலைகளுக்குமிடையில் நெருங்கிய சம்பந்தமிருப்பதாகவே தோன்றுகிறது. மத்திய அரசாங்கம் கள்ளத்தனமான தன் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள புலிப் படையினரைப் பயன்படுத்திக் கொள்கிறார்களா?

எது எப்படியானாலும், அப்பாவி மக்கள் படுகொலையாவதிலும் பரிதாபத்திற்குள்ளாவதிலும் அரசியல் லாபம் தேடுவதில் மனிதகுல விரோதிகளே திருப்திப்பட்டுக்கொள்ள முடியும்.

நிரந்தர அமைதியையும், சமாதானத்தையும் நோக்கி மக்களை வழிநடத்த முற்படும் அனைத்து சக்திகளும் இத்தகைய நடவடிக்கைகளைக் கண்டிக்க முன்வர வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மறைவாக நமக்குள்ளே .....
# மறைவாக நமக்குள்ளே .....
# மறைவாக நமக்குள்ளே .....

### -- ஜகதலப் பிரதாபன் --

லண்டனிலிருந்து இரகசியமாகக் கொழும்புக்கு வந்து, பின்னர் கொழு ம்பிலிருந்து அரசாங்க உதவியுடன் இரகசியமாகவே வடபகுதிக் காட்டுக்குச் சென்ற இயக்கப் பிரமுகர் ஒருவர், பின்பு பகிரங்கமாக விளம்பரப்படுத்தி இராணுவ உடை பரிவாரம் சகிதம் பேச்சுவார்த்தைக்காக கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டாராம்.

''குமரப்பா புலேந்திரனோடு பதினேழு பேரைக் கொழும்புக்குக் கொண்டுபோக இருந்தபோது; அவர்களை நஞ்சு குடிக்கச் சொன்னவர்கள் அதுக்காகவே சண்டையையும் துவக்கினார்கள். இப்போது சமாதானத் தீர் வுக்கு கொழும்புக்குப் போயிருக்கிறார்கள்...... தமிழீழத்தைத் தாகமாய்க் கொண்டவர்களுக்கு, கொழும்பில் சிறீலங்கா ஜனாதிபதி, குடிக்கக் கொடுப் பதற்காகத் தமிழீழத்தைக் 'கிளாசு'க்குள் வைத்துக் காத்திருக்கிறாரா...?'' என்று வினவினார் தமிழ்க் குடிமகன் ஒருவர்.

''இந்தப் பேச்சுவார்த்தை ஸ்டண்டைப் படம் பிடித்து அனுப்பினால் வெளிநாடுகளிலெல்லாம் பணம் குவியல் குவியலாகச் சேர்க்கலாமே! என்று நம்மிடம் வந்து நாக்கைச் சப்புக் கொட்டிக்கொண்டார் தீவிர மிருக ஆத ரவுக்காரர் ஒருவர்.



மாதமிருமுறை அல்லது இரண்டு மாதத்திற்கு ஒருமுறை எனத் தடங் கித்தடங்கி வரும் கட்சிப்பத்திரிகை ஒன்றில் வெளியான ஒரு கட்டுரை யில் ஒரு இயக்கத்தின் உட்கொலைகள் பற்றிய புள்ளிவிபரம் கொடுக்கப் பட்டிருந்ததைப் படித்த அவ்வியக்கத்தலைவர் தெரிந்தவர்களிடத்தில் வருத் தப்பட்டுக்கொண்டாராம். இயக்கத்தினுள் ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற் காக ஏதோசில வேண்டாத சம்பவங்கள் நடைபெற்றன என்பது உண்மை தான் ஆனால், அப்பத்திரிகையில் குறிப்பிட்டிருப்பதுபோல் அவ்வளவு அதி கமான தொகையில் கொலைகள் நடக்கவில்லை என்று உண்மை விளம்பி னாராம் அத்தலைவர்.

உங்கள் இயக்கத்திலிருந்து விலகிய ஒருவரின் தகவல்தான் அது, பரவா யில்லை எத்தனை பேரைக் கொலைசெய்தீர்கள் என்று சரியான கணக் கைச் சொன்னால் அடுத்த இதழில் திருத்தத்தை வெளியிட்டு விடுகிறோம் என்று பத்திரிகைக்காரர்கள் சார்பில் சொல்லப்பட்டதாம்.



சமீபத்தில் வன்னிக் காட்டுக்குள் 'ஒபரேஷன்' ஒன்றுக்குச் சென்றிருந்த இந்தியப் படை வீரர்கள் விஸ்தீரணமான — எல்லா வசதிகளுடனுமிருந்த முகாம் ஒன்றைக் கண்டுபிடித்தார்களாம். ஜெனரேட்டர், (F)பிரிஜ், டி.வி. போன்றவற்றுடன் காட்டுக்குள் கிணறுகளும் கட்டப்பட்டிருந்ததாம். திரும் பும்போது அங்கே உபயோகித்தபின் வீசப்பட்டிருந்த கருத்தடைச் சாதனங் கள் ஏராளமானவற்றைப் பைகளில் போட்டு எடுத்து வந்திருக்கிறார்களாம். அந்த இடத்திலிருந்து எடுத்து வந்த வீடியோ படக் கொப்பிகளில் ஒன்றின் மீது 'பார் மகளே பார்' என்று எழுதப்பட்டிருந்ததாம். போட்டுப் பார்த் தால்......முழு நீள புளூ பிலிமாம்! காட்டுக்குள்ளே திருவிழா......



சமீபத்தில் இங்கிருந்து மாற்றலாகிப்போன ஒரு வெளிநாட்டு இராஜ தந்திரியின் பிரிவுபசார வைபவத்தின்போது ''உங்கள் அனுபவங்களை எழு திப் புத்தகமாய் வெளியிட்டால் பலருக்கும் மிகுந்த உபயோகமானதாக இருக்குமே, செய்தால் என்ன? என்று பத்திரிகையாளர் ஒருவர்கேட்டாராம்.

அதற்கு அந்த இராஜ தந்திரி 'எனக்கொன்றுமில்லை. அந்த புத்தகம் வெளிவந்த ல் இங்கு பல தலைகள் உருளும், பலர் ஆட்டம் கண்டுவிடுவா ர்களே! என்று சிரித்துக் கொண்டே சொன்னாராம்.



அயல் நாட்டுப் படையெடுப்பு புகழ் இயக்கத்தின் உப தலைவர்கள் பலரும் இயக்கத்தை வீட்டுக் கழன்று வருகின்றார்களாம். மறைந்த கூட்ட ணி எம்.பி யின் தனயன் கூட்டணியிலேயே சேர்ந்து கொள்வதற்கு விருப்பம் தெரிவித்திருக்கிறாராம். மலர்க்கணை விடுபவர் மலையகமே சரண் என்றாகி விட்டாராம். மற்றுமொருவர் தன் நண்பரிடத்தில் சொன்னாராம் ''இனி சரிவ்ராது, ஆனால் இதுக்குள்ளிருந்து மெதுமெதுவாகத்தான் கழர வேணும் ......'' என்று. சிவ சிவா ராம ராம......

5 ம் பக்கத் தொடர்ச்சி

இதைத்தான் ஒரு வருடமாக நாங்கள் சொல்லி வருகிறோம்; எதிர் பார்க்கிறோம். ஒற்றுமையும் சமாதா னமும் ஏற்பட வேண்டும், இந்தக் குழப்பங்கள் எல்லாம் நீக்கப்பட வேண்டும், எங்களுக்குள் ஒற்றுமை இருந்தால்தான் மேலும் மேலும் நாங்கள் பலப்படுவது சாத்தியமாக இருக்குமென்று மனப்பூர்வமாக விரும்புகின்றோம்.

அத்தோடு இதையும் அவருக்குக் கூறினேன்;

''நீங்கள் எங்களுடைய மூத்த சகோதரர் மாதிரி உங்களுக்கு அரசி யல் நாணயம் தெரியும், நல்லது கெட்டது புரியும். நாங்கள் இதை ஏற்படுத்துவதிலே என்ன செய்ய வேண்டுமென்றுஎதிர்பார்க்கிறீர்களோ அதைச் சொல்லுங்கள். அந்த ஒத்து ழைப்பைத் தரத் தயாராக இருக்கின் றோம். அப்படி நீங்கள் ஏற்படுத்தித் தருவீர்களானால் நன்றியுடையவர் களாகவும் இருப்போம்''

கலைஞர், தமிழ்நாட்டிற்கு முத லமைச்சராக வந்தவுடன் இங்குள்ள இன்னல் எல்லாம் சிக்கலாக மாறிவி டும், பிரச்சினைகளாக மாறிவிடும் என்றெல்லாம் பலர் எதிர்பார்த்தார் கள்.

ஆனால் நிலைமை அப்படியல்ல.

இங்கே அமைதி ஏற்பட வேண் டும், சமாதானம் ஏற்படவேண்டும், தமிழ் பேசுகின்ற மக்கள் அரசியல் ரீதி யாகவும் பொருளாதார ரீதியாகவும் முன்னேறுவதற்கான சூழ்நிலை ஏற் படவேண்டுமென்றே அவரும் அக்க றையாக இருக்கிறார் என்பதை இந் தச் சபையிலே தான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## பொறுப்புணர்வோடு செயற்படுவோம்.

இந்த மாகாண சபையில் இருந்து கொண்டே மாகாணசபைக்கு அதிகா ரத்தைக் கோரி போராடவேண்டிய நிலைமையில் உள்ளோம்.

மாகாணசபையில் முதலமைச்ச ராக இருந்து கொண்டே டெல்லிக்குப் போகவேண்டிய நிலைமை,

இதை தூக்கிப் பிடித்துக்கொண்டு குழப்புகிறவர்களுக்குப் பதிலளிக்க வேண்டிய நிலைமை எல்லாம் ஏற்ப டுகின்றது.

இது முடியுமோ இன்னும் தொட ருமோ தெரியவில்லை.

இருந்தாலும் மறுபக்கம், இந்த மாகாண அரசாங்கத்தினூடாக எமது மக்களுக்கு என்னவெல்லாம் புனர்வாழ் வுப் பணி செய்யமுடியுமோ, எவ்வா றெல்லாம் பிரதேசத்தைப் புனரமைக்க முடியுமோ அவ்வளவும் செய்துமுடிக் காமல் நாம் ஓயப்போவதில்லை.

இருபதினாயிரம் மில்லியனுக்குக் கணக்குக் கேட்டு, அதை எங்களுக் குத் தரவேண்டும் என்கின்ற விடயத் துக்காகப் போராடிக் கொண்டிருக் கின்ற அதேவேளையில்—

382 மில்லியன் ஒதுக்கப்பட்டிருப்ப தை எப்படி நாங்கள் சரியான முறை யிலும் வரைவாகவும் மக்கள் பயன டையும் வகையில் அந்தப் பயன்படுத் துவது என்பதிலும் நாங்கள் அக்கறை செலுத்த வேண்டும் என்பதை இச்ச பையில் உள்ள உறுப்பினர்கள் அனை வருக்கும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த சபையில் உள்ள கௌரவ உறுப்பினர்கள் அனைவரும் அந்த விடயத்தில் ஒத்துழைக்க வேண்டுமெ ன்று இச்சபையிலே கோருகின்றேன்.

ஏனென்றால்—

ஒவ்வொரு மாவட்டத்திற்கும், இப்பொழுது இந்தியாவிலிருந்து கிடைத்த உதவிப்பொருட்கள் அனுப் பப்பட்டுக் கொண்டிருக்கின்றன. சில மாவட்டங்களுக்கு ஏற்கனவே அனுப் பப்பட்டுவிட்டன.

அவை சரியான முறையில் மக்க ளுக்குப் போய்ச்சேரவேண்டிய வகை யில் அதற்கான ஏற்பாடுகளை மேற் கொள்ளுவதற்கு கௌரவ உறுப்பினர் கள் அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கி றேன்.

வடக்கு கிழக்கு மாகாணத்திற் குள்ளே உள்ள எட்டு மாவட்டத்திற் கும் உரியவகையில் இருக்கக்கூடிய மாகாணசபை உறுப்பினர்களைப் பகிர்ந்து, ஒவ்வொரு மாவட்டத்திற் கும், அந்தந்த மாவட்ட வேலைகளை பொறுப்பெடுக்கும்படியும்'

அவர்களையும் ஒருங்கிணைத்துக் கொள்ளும்படி அந்தந்த மாவட்டங் களிலும் அதிகாரிகளுக்கு அறிக்கை கள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

வீடமைப்புவேலையாக இருந்தா லும்சரி,

வீதி அமைப்பு வேலையாக இருந் தாலும் சரி,

மீன்பிடி, விவசாயத் துறைகளை ப் புனரமைக்கிற வேலையாக இருந் தாலும் சரி—

கௌரவ உறுப்பினர்கள் தத்தம் பகுதிகளிலிருந்து எல்லாவகையான ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்ள உதவுவார்கள் என்று நம்புகிறேன்,

தேவைப்படுகின்ற உழைப்புச்சக்திக ளைத் திரட்டுதல், மக்களுக்கு நம்பிக் கை ஊட்டுதல், மக்கள் மத்தியில் ஊக் கத்தை ஏற்படுத்துதல், மக்களையும் இந்தப் புனரமைப்பு பணிகளில் பங்காள ராக மாற்றுதல் என்பதான பணிகளில் கௌரவ உறுப்பினர்கள் ஈடுபடவேண்டும் எனப்பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

நாங்கள் எவ்வளவுதான், மத்திய அரசாங்கத்திடமிருந்து ஒழுங்கு முறை யாக அதிகாரங்களைப் பெற்றுக்கொள் வதற்காக குரலெழுப்பிக்கொண்டும்,

ஓர் அமைதியான போக்கில் போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டி ருந்தாலும், அதேநேரத்தில்—

துன்பப்பட்டிருந்த மக்களுக்கு நிவாரணங்களை வழங்குதல், முடிந் தளவு புனரமைப்பு வேலைகளை மேற்கொள்ளுதல் என்பதிலும் நாங் கள் ஈடுபடவேண்டும் என்ற பொறுப் புணர்வோடு அனைவரும் செயற்படு வோம்.

அதிகாரத்தைப் பெறுவதற்கான முதலாவது கட்டமே இத்தனை புய லாக்கி வைத்திருக்கிறார்கள்; இரண் டாவது கட்டத்திற்குநகர்ந்தால் பூகம் பமே வெடித்துவிடுமோ தெரியவில் லை,

எதுவும் எங்களுக்குப் பிரச்சினை யில்லை.


''அதிகாரத்தைத் தாருங்கள், அதி காரங்களை மாகாண சபைகளுக்குக் கொடு என்ற கலோகத்தோடு நாங்கள் முன்னேறுவோம்.

நெஞ்சக் குருதியை
நிலத்திடை வடித்து
வஞ்சகமழிக்கும்
மாமகம் புரிவம் யாம்.
—பாரதி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

புதியகண்ணோட்டம்

வெளியீடு 12   1989 வைகாசி 01



## ‘நானா’ படுகொலைக்கு மா.சபை கண்டனம்.

கடந்த பங்குனி 30ந் திகதி திருகோணமலையில் தோழர் நானாவைக் கடத்திச் சென்ற ஈரோஸ், கொலை செய்து நானாவின் சடலத்தைக் காட்டுக்குள் வீசி எறிந்திருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

ஈரோஸ் ‘டம்பிங்’ குழுவினரான கஜன் கோஷ்டியினரால் பொதுமக்கள் முன்னிலையில் பலாத்காரமாகக் கடத்திச் செல்லப்பட்ட நானா என்றழைக்கப்படும் குமாரவடிவேலின் சடலம் கருகிச் நிலையில் திருகோணமலை துவரங் காட்டுக்குள்ளிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த பொதுத் தேர்தலில் சுயேட்சைக் குழு 2 இன் தலைவராக மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்ட தோழர் நானா ஈழப் போராட்டத்தில் ஆயுதமேந்திக் களத்தில் நின்று தன் ஒரு காலை ஊனமாக்கிக் கொண்டவர். தேர்தலின் பின்னர் தமிழ் அமைப்புகள் அனைத்தையும் ஐக்கியப் படுத்தும் முயற்சியிலும், அமைதி— ஜனநாயக நிலைமைகளை உருவாக்கும் கடமையிலும், புனர்வாழ்வு புனரமைப்பு சம்பந்தமான வேலைகளிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு செயற்பட்டு வந்தார்.

‘தமிழ் பேசும்’ மக்கள் தேசிய சபை’ சம்பந்தமாகப் பேச்சு வார்த்தைகளை நடத்துவதற்காக மட்டக்களப்பிலிருந்து திருகோணமலை வந்த நானாவை ஈரோஸ் குழுவினர் தமது அரசியல் வஞ்சத்தனம் காரணமாகக் கடத்திச் சென்று பழிதீர்த்துக் கொண்டுள்ளனர்.

புலிகள், புளொட் வரிசையில் ஈரோசும் உட்கொலைகளுக்குப் பிரபல்மடைந்திருப்பதைச் சம்பவங்களும் ஈரோசிலிருந்து விலகிய உறுப்பினர்களும் சான்றுகள் தருகின்றனர், இது தவிர கந்தசாமி கதிரமலை என்று பொது மனிதர்கள் மீதும் ஈரோசினர் யாய்ச்சல் நடத்தி வருகின்றனர். இவையெல்லாம் கண்டிக்கப்படுவதுடன் நின்று விடாது விசாரணை நடத்தித் தண்டிக்கப்படவும் இத்தகைய நயவஞ்சகப் படுகொலைகள் நிறுத்தப்படவும் வேண்டுமென வடக்கு கிழக்கு மாகாண சபையில் அனைத்துக் கட்சியினரும் கண்டித்துப் பேசியுள்ளனர். ஈரோஸின் கொலைத் தனங்கள் மீது கண்டனம் தெரிவிக்கப்பட்டதோடு நானாவின் படுகொலைக்கு அனுதாபப் பிரேரணையும் கொண்டுவரப்பட்டு விவாதிக்கப்பட்டது.

## சொன்னார்கள் - சொல்கிறோம்

27 ஆயிரம் கொண்ட இலங்கை பொலிஸ் படையில் முஸ்லிம்களோ தமிழர்களோ ஐநூறு பேர்கூட இல்லை முப்படைகளிலும் தமிழ் பேசுவோர் எத்தனைபேர்? இந்நிலையில் தமிழ் மக்கள் இலங்கை பொலிஸ் படையிலோ எப்படி நம்பிக்கை வைக்க முடியும்?

—பிரேமச்சந்திரன் எம்.பி

வடக்கு கிழக்குப் பிரச்சினையில் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் நிலை கூடாது. இப்போதே முழுமையான தீர்வைக் கண்டுவிட வேண்டும். மாகாணசபைகளுக்கான அதிக அதிகாரங்களைக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் இந்தியப் படைகளை வெளியேறச் செய்யலாம்.

—வாசுதேவ நாணயகார

மாகாண சபையா, மாகாண அரசாங்கமா என்ற பிரச்சினை எழுப்பப்பட்டது, ஒரு நாட்டில் ஓர் அரசுதான் இருக்கலாம் என குழந்தைத்தனமான பதில் இங்கு கூறப்பட்டது.
உங்கள் நேச சக்தியான அமெரிக்க நாட்டிலே 53 மாகாண அரசுகள் செயற்படுகின்றன, எமது நாட்டிற்கு பக்கத்தில் இந்தியாவில் 25 மாநிலங்கள் செயற்பட்டுவருகின்றன. சோவியத் யூனியனிலோ 15 குடியரசுகள் செயற்பட்டு வருகின்றன. தயவு செய்து இது போன்ற விடயங்களில் உங்களுக்குத் தெளிவு இல்லையானால் ஒரு நல்ல விரிவுரையாளரிடம் அறிவுரை கேட்பதில் தவறு ஏதும் இல்லை என கூறிவைக்க விரும்புகிறேன்.

—பாராளுமன்றத்தில் யோகசங்கரி

## எங்கே உள்ளது அமைதி?

எங்கே உள்ளது அமைதி? எங்கே உள்ளது நம்பிக்கை?
அவை எங்கும் இல்லை—அவை
இங்கே உன்னுடைய, என்னுடைய, அவனுடைய—ஆம்
அனைவரதும் கரங்களில்தான் தவழ்கின்றது
தனது விதியை தானே ஆளுகின்ற ஒவ்வொரு மனிதனின் கரங்களிலும்
அது பண்ணிசை மீட்டுகின்றது.

எங்கே உள்ளது அமைதி? எங்கே உள்ளது நம்பிக்கை?
அவை அன்பளிப்புப் பொருட்களல்ல;
அவை பெறப்பட்ட பொக்கிஷங்களும் அல்ல;
அவை வெறும் கற்பனைக் கனவுகளும் அல்ல,
அவை வாழ்க்கையின் மகிழ்ச்சி, அழகின் உருவாக்கம்,
அன்பின் விதைப்பு — அத்தோடு அவை
நட்பைப் பேணவும், சவிதையை உணர்வூட்டவும்
வழிவகுக்கும் நெருப்புப் பிழம்புகள்.

எங்கே உள்ளது அமைதி? எங்கே உள்ளது நம்பிக்கை?
எங்கே துவக்குச். சூடு இல்லையோ, எங்கே பயங்கரம்
தலைவிரித்தாடவில்லையோ, எங்கே பஞ்சம் பசி பட்டினி இல்லையோ
எங்கே மனிதன் விலங்கைப்போல் அசிங்கப்படுத்தப்படவில்லையோ
எங்கே வெளிநாட்டு ஊடுருவற்காரர்கள் காட்டுதர்பார் நடத்தவில்லையோ
அங்கேதான் உள்ளது அமைதி! அங்கேதான் உள்ளது நம்பிக்கை!

அமைதி இங்கே உள்ளது, அது உனது நாட்டிலும் உள்ளது,
எனது நாட்டிலும் உள்ளது,
எங்கே நதிகளில் மீன்களும் இறால்களும் நிறைந்துள்ளனவோ
எங்கே அற்புதமான ஆடுகளும் குதிரைகளும்
புல்வெளிகளில் மேய்கின்றனவோ
எங்கே இரைச்சல்மிக்க காடுகளும் பறவைகளின் இசையொலிகளும்
மலைகளைக் களிநடனம் ஆடச் செய்கின்றனவோ
அங்கேதான் உள்ளது அமைதி! அங்கேதான் உள்ளது நம்பிக்கை!

அமைதி இங்குதான் உள்ளது!
ஓசை எழுப்பும் கோதுமை வயல்களில்
நாதம் இசைக்கும் கம்பியூட்டர்கள் இயக்கும் அறைகளில்
அமைதியான இரவில் மகிழ்துயிலில் ஆழ்ந்திருக்கும்
மழலைகளின் தொட்டிலில்!

அதிகாலையில் வேலக்குச் செல்வோரின் பாதங்கள் எழுப்பும்
அணிநடை நாத ஒலியில்
அமைதி இங்குதான் உள்ளது! அமைதி இங்குதான் உள்ளது!
விளையாட்டுத் திடல்களில் குழந்தைகள் எழுப்பும் மகிழ்ச்சிச் சிரிப்பொலியில்
அமைதி ரீங்காரமிடுகின்றது.
இசை அரங்கங்களில் வயலின்கள் எழுப்பும் அமைதியான
நாத ஓசையில் அமைதி தேனாய்த் திகழ்கின்றது.
மர நிழல்களின் கீழ் இளம் காதலர்கள் பரிமாறும் முத்த மழைகளில்
அமைதி நர்த்தனமாடுகின்றது.

ஆபிரிக்கச் சகோதரர்களே! மேலும் அழுத்தம் கொடுங்கள்
‘ஒரு நீண்ட தூர ஓட்டத்தில்’ தீவர்த்தியை உயர்த்திப் பிடியுங்கள்
பஞ்சத்தின் மடியில் உழன்று தவிப்போர் காப்பாற்றப்படட்டும்
‘கறுப்புக் கண்டத்திற்கு ஒளியைத் தருவோம்.
முன்னெடுங்கள்! மக்கள் கையிணைப்புத் தொடர் சங்கிலியில்
போராட்டம் அமெரிக்கக் கண்டத்துக்கப்பாலும்
கிளர்ந்தெழட்டும்.

ஒருக்காலும் பிரிவு வேண்டாம், கடைத்தேறுவதற்காக ஐக்கியம்
ஏஜியன் கடற்கரையில் நடாத்தப்பட்ட ‘சமாதான மரதன் ஓட்டம்’
இந்த எச்சரிக்கைத் தொனியைத்தான் எக்காளமிடுகின்றது!
‘வேண்டாம் அணுக்குண்டுகள்! வேண்டாம் இனி யுத்தங்கள்’
எங்களுக்கு வேண்டும் சமாதானம்! நாங்கள் வேண்டுவது படைக்குறைப்பு!

வாருங்கள் நண்பர்களே!
ஒலிம்பிக் விளையாட்டுக்களின் போட்டிகளுக்கு நாம் செல்வோம்.
அண்டார்ட்டிக்கில் விஞ்ஞான ஆய்வுக் குழுக்களின் கொடிகளை
ஏற்றச் செல்லுவோம்.
சந்திரனிலும் செவ்வாயிலும் அஞ்சல் நிலையம் உருவாக்கச் செல்வோம்,
அண்டவெளிக் கண்டங்களுக்குச் சென்று அங்குள்ள ஜீவராசிகளுடன்
சந்தித்துப் பாடி ஆடிக் களிப்போம்.

ஆம் இங்குதான் சமாதானம்! இங்குதான் நம்பிக்கை!
பிரகாசிக்கும் சந்திர நட்சத்திர ஒளி வெள்ளத்தில்
பட்டுக் கொடிகள் பறந்தசைய பாய்மரக் கப்பல்களில் பவனிவருவோம்.
நாம் எல்லோரும் ஒரே படகில்தான் செல்கின்றோம்!
பேரலைகளையும் பெருஞ் சூறைக்காற்றையும் ஒன்றாக எதிர்கொள்வோம்.
சூரிய ஒளியால் புடம் போடப்பட்டு, பாடல்களால் களிப்பூட்டப்படும்
கடலின் மறுகரையை நாம் சென்றடைவோம்.

☆

சர்வதேச சமாதான ஆண்டை முன்னிட்டு 1686ம் ஆண்டில் சூசிகுயி என்பவரால் இயற்றப்பட்ட கவிதை இது.SYMPHONY OF PEACE என்ற கவிதையிலிருந்து ஒரு பகுதியாகும். சூசிகுயி 1921ல் ஹீனானில் பிறந்தவர் இக்கவிதை CHINESE LITERATUREகாலாண்டு சீன சஞ்சிகையின் (1987) நான்காவது இதழில் வெளிவந்ததாகும்.

—மொழிபெயர்ப்பு : ந.சுரேந்திரன்

## ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்காக ... வீதி, ...த்தில் வசிக்கும் பி.இராமலிங்கம் அவர்களால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org